[illegible]
V. 3 No. 10
Oct 1930.

JL
R673 [illegible] N78
N30

137147

231

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 10.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1930ஞு அக்டோபர்மீ | இதழ் ௧௦ |
|---|---|---|

...CE OF THE ...
15 OCT 1930

உள்ளுறை பக்கம்

ஆடும் பரிவேலணி சேவல் ... [illegible]

வெள்ளி விழா முன்னுரை ... உ[illegible]

தேவாரம் என்னும் சொற்பொருள் ... உஉச

சிவஞானபோத விளக்கம் ... உஉசு

கொல்லி மலையின் வளங்களும் யான் கண்ட புதுமைகளும் உரு௦

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,

உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.

தனிப் பிரதி அணா 3.

# சமாஜ அறிக்கைகள்

(1) நம் சமாஜத்திய இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவிழா நடத்துவதைப் பற்றிய காலம், இடம், தலைவர், நடைமுறை முதலிய விவரங்களை முடிவு செய்வதற்காக சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 150-வது எண்ணுள்ள இல்லத்தில் 1930௵ நவம்பர்௴ 15௳ சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கூடும். அது போழ்து பொதுக்கூட்டம் நடைபெறுதற்குத் தேவையான அங்கத்தவர் நிறைவெண் கிடைக்காவிடில் (Quorum) ௸ விஷயங்களைத் தீர்மானிப்பதற்கே ௸ இடத்திலேயே 1930௵ நவம்பர்௴ 17௳ திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சமாஜ விதிகளின்படி வருவோரைக் கொண்டு அக்கூட்டம் நடைபெறும்.

(2) ௸ விழா நடத்துவதைப் பற்றிய காலம், இடம், தலைவர், நடைமுறை முதலிய விவரங்களை எழுத்துமூலம் அறிவிக்க விரும்புவோர் காரியதரிசிக்கு 10-11-1930-க்குள் தபால்மூலம் அறிவிக்க வேண்டும்.

(3) ௸ நிறைவிழாவில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்பும் சமாஜ அங்கத்தினர், சமாஜ உறுதிமொழியில் கையெழுத்திட்டு தாங்கள் விரும்பும் தீர்மானங்களையும் தெளிவாகத் தமிழில் எழுதி 30-11-1930-க்குள் காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(4) ௸ நிறைவிழாவில் சொற்பொழிவுகள் நிகழ்த்த விரும்பும் பெரியார்கள் தங்கள் தபால் விலாசங்களைத் தெளிவாக எழுதித் தங்கள் சொற்பொழிவுகளின் பொருள்களையும் தாங்கள் தங்கள் சொந்தச் செலவில் வருதல் கூடுமா அன்றி பிரயாணச் செலவு பெற விருப்பமா என்பதையும் 30-11-1930-க்குள் காரியதரிசிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(5) ௸ விஷயங்கள் பற்றிக் கடிதம் எழுதுவோர் உடனே காரியதரிசியிடமிருந்து பதில் பெற விரும்பின் அதற்குரிய தபாற் செலவையும் அனுப்பிவைக்க வேண்டும்.

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,
சென்னை 10—10—30

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

---

# நன்கொடை

1. தென்னார்க்காடு ஜில்லா கிழக்குமருதூர் திருச்சிற்றம்பல இல்லம் திருவாளர் தி. கு. தி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தமது திருமணத்தில் நமது சமாஜத்துக்கு ரூபாய் இருபத்தைந்தும் ௸யார் மனைவியார் திருவளர் செல்வி அலர்மேல் மங்கையார் ரூபாய் இருபத்தைந்தும் நன்கொடையாக அளித்ததை அன்புடன் ஏற்றுப்பாராட்டுவதுடன் அவ்விருவரையும் நமது சமாஜ ஆயுள் அங்கத்தவர்களாகப் பதிவு செய்துள்ளோம்.

2. ௸ ஜில்லா உதவி மெடிகல் ஆபீசர் திரு. எஸ். பாலவேலாயுதம் பிள்ளையவர்கள் தமது தந்தையார் வெளியிட்ட "கைவல்ய நவநீதம்" (மூலமும் உரையும்) என்னும் நூல் 99 பிரதிகளை சமாஜத்துக்கு நன்கொடையாக அளித்ததை ஏற்று அவர்கட்கு நன்றி செலுத்துகின்றோம்.

---

# பரிசு! பரிசு!! பரிசு!!!

1. இன்று முதல் 1930௵ நவம்பர்௴ 10௳க்குள் நமது சமாஜத்துக்கு ஓர் ஆயுள் அங்கத்தினரைச் சேர்த்து, அவர் செலுத்தவேண்டிய ஆயுள் சந்தா ரூபாய் இருபத்தைந்தையும் உடனே மணியார்டர்செய்து உபகரிக்கும் அன்பருக்கு நமது சமாஜம் வெளியிட்ட சுந்தரர் தேவாரம் பிரதிகள் பத்து இனாமாக அளிக்கப்படும்.

2 ௸ தேதிக்குள் நமது சமாஜத்துக்கு பத்து சாதாரண அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் செலுத்த வேண்டிய சந்தாத் தொகை ரூபாய் பதினைந்தையும் உடனே மணியார்டர்செய்து உபகரிக்கும் அன்பருக்கு நமது சமாஜத்திய சுந்தரர் தேவாரம் பிரதிகள் ஐந்து இனாமாக அளிக்கப்படும்.

3. ௸ தேதிக்குள் அவ்வாறே ஐந்து அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் சந்தாத் தொகை ரூபாய் எழரையை உடனே மணியார்டர் செய்விக்கும் அன்பருக்கு ௸ சுந்தரர் தேவாரம் பிரதி ஒன்று இனாமாக அளிக்கப்படும்.

சென்னை,
10—10—1930.

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

15 OCT 1930

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு"



| | | |
|---|---|---|
| மலர் ௩ | பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1930 ௵ அக்டோபர் ௴ | இதழ் ௧௦ |



## ஆடும் பரிவேலணி சேவல்

[பத்திராசிரியர்]

முருகக் கடவுள் திருவருள் பெற்று விளங்கினவர்களுள் தலை சிறந்தவர் அருணகிரிநாதர். அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய தோத்திரப் பாக்களுள் மிகச் சிறப்புற்று நாடோறும் பூசை வேளையில் பாராயணத்துக்குரியது "கந்தர் அநுபூதி" என்ற நூல். இவ்வநுபூதியின் முதற் பாட்டின் முற்பகுதியிலே "ஆடும்பரி, வேல், அணிசேவல் எனப், பாடும் பணியே, பணியாய் அருள்வாய்" என்று ஆசிரியர் கடவுளை வேண்டியிருப்பது நோக்கத்தக்கது. முருகக்கடவுளின் திருவடியையேனும், திருவுருவத்தையேனும், திருவருட்டிறத்தையேனும் பாடும் பணியே பணியாய் அருள்வாய் என வேண்டாது மயில், வேல், சேவல் ஆகிய முப்பொருள்களைப் பாடும் பணியே வேண்டுமென விண்ணப்பித்ததின் நோக்கம் என்னை? ஊர்தி, ஆயுதம், கொடி ஆகிய மூன்றைமட்டும் சிறப்பித்ததின் கருத்து என்னை?

முருகக் கடவுள் பராக்கிரமங்களுள் அனைவராலும் கொண்டாடப்படுவது பதுமாசுர சம்ஹாரம். இதைச் சூர சம்ஹார உத்ஸவமாக முருகவேள் ஆலயங்களில் ஐப்பசி௴ சுக்கிலபக்ஷம் சஷ்டி யன்று கொண்டாடுவார்கள். நாளது ஐப்பசி௴ ௧௧௳ (27-10-1930) திங்கட்கிழமை யன்று இவ்வுத்ஸவம் வருகிறது. முருகவேள் அடியார்கள் இந்நாளில் உபவாஸம் இருந்து முருகன் திருவருட்பாக்களைப் பாராயணம் செய்து திருவருள் பெறுவது வழக்கம். சிறு பிள்ளைகளுக்கு இந்த

உத்ஸவம் நன்ருக ஞாபகமிருக்கும். ஏனெனில் உத்ஸவத்தில் தலைகளை மாற்றி மாற்றிப் போட்டுச் சூர சம்ஹாரம் நடக்கிறபடியால் இந்த "வேடிக்கை" அவர்கள் மன திருப்தி தந்துவிடும்.

" எத்தன்மை குற்றம்
இயற்றிடினும் தாய் பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும்
அன்ருே பராபரமே "

என்பது போன்ற முதுவாக்குகள் பலவற்றின்படி கடவுள் அருள்வடிவுடையவர், குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் பெற்றியுடையவர் என்றெல்லாம் நூல்களில் நாம் காணக்கிடக்க, ஒரு சூரனை வதைத்ததே முருகக் கடவுள் வீரச் செயல்களிற் சிறந்தது என்று நாம் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்று சிலர் சந்தேகிக்கலாம். அருட்கடலாக மக்களால் மதிக்கப்படும் ஒரு கடவுளுக்கு ஒரு கொலையே சிறப்புச் செயலாயிற்று என்று "பகுத்தறிவுடையவர்கள்" எவ்வாறு கொள்வது?

சூரபதுமன் சிவ பெருமானை நோக்கிக் கொடிய தவம் புரிந்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு சதுர் யுகம் ஆளும் வரம் பெற்றவன் என்று புராணம் கூறுகின்றது. அவ்வாறு ஆண்டவன் நீதி தவருது குடிகளை வருத்தாது பிறர்க்குத் துன்பம் இழைக்காது தான் இன்புற்ருன் என்று புராணம் கூறவில்லை. அநீதியாக, குடிகளைப் பெரிதும் வருத்தி, பிறர்க்குத் துன்பம் விளைவிப்பதையே தொழிலாகக் கொண்டு கொடுங்கோல் புரிந்தான் என்று புராணம் கூறுகின்றது. எல்லாரும் இன்புற்றிருக்கத் தானும் இன்புறுவது சுத்த சாத்வீகச் செயல், எல்லோரையும் துன்புறுத்தித் தன்மட்டில் இன்பு[illegible]றது" என்னும் செருக்கால் விழுங்கப்பட்டவன்செயல். எனவே சூரபதுமன் செயல் சுத்த சாத்துவிகச் செயலல்ல வென்றும் "நான் எனது" (அஹங்காரம், மமகாரம்) என்னும் செருக்கிஞல் விழுங்கப்பட்டவன் செயலாகவே இருந்ததென்றும் விளங்குகிறது.

இவ்வுலகத்திலே மக்களுள் ஏற்படும் போராட்டம் எல்லாம் "நான் எனது" என்னும் உணர்ச்சியால் உண்டாகும் சச்சரவேயாகும். இவ்வுணர்ச்சியின் மிகுதியால் தன்னையும் தன்னுடைய பொருள்களையும் பிறர் பொருள்களிலிருந்து வேறு படுத்தித் தானும் தன் பொருளும் எவ்வகையிலும் சிறக்கவேண்டு மென்று செய்யும் முயற்சியே பெரும்பாலும் பிறருக்கும் பிறர் பொருள்களுக்கும் தீமையை விளை விக்கிறது. இதனல் காமக் குரோத லோப மோக மத மாத்ஸர்யங்கள் உண்டாகின்றன. பஞ்சமஹா பாதகங்களும் நிகழ்கின்றன.

சூரபதுமன் அநீதியையும் கொடுமையையும் தாங்கமுடியாத அமரர் முதலாய குடிகள் சிவபெருமானிடம் முறையிட்டனர் என்றும் சிவபெருமான் அருள்பாலித்து, கந்தவேளை ஈந்து சூர சம்ஹாரம் நிகழ்த்தும்படி கட்டளையிட்டனர் என்றும் புராணம் கூறுகின்றது. பிறருக்கு இன்பம் விளைவிப்பது எவ்வாறு அருட்செயலாகுமோ அவ்வாறே பிறருக்குத் துன்பம் விளை விப்பானைத் தொலைப்பதுவும் அருட்செயலே யாகும் என்பதைப் "பகுத்தறிவுள்ளவர்கள்" மறுக்க இயலாது. ஆகவே இப்பெரிய அருட்செயலை நிகழ்த்துவதற்கே சிவ் பெருமான் கந்தவேளையீந்து அருள் பாலித்தனர்.

187147



உயிர்களிடத்துள்ள "நான் எனது" என்னும் இருமாப்பாகிய ஆணவ மலத்தைப் போக்கி இன்பம் நல்குவதே இறைவன் பேரருட்டிறமாகும். சூரபதுமன் இவ்விறுமாப்பால் விழுங்கப்பட்டவன் என்பதை மேற்கூறிய வாற்ருல் கண்டோம். திருநோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால்தீக்கை முதலியன செய்வித்தலால் இவ்வுடம்பை வைத்தே மலத்தைப் போக்குவது ஒரு முறை. அம்முறையில் பரிபக்குவமடைந்தவர்களே நமது புராணங்களிற் காணப்படும் எண்ணிறந்த அடியார்கள். மலத்தைப் போக்குவதற்கு மற்ருெரு முறையுமுண்டு. மலம் உயிரைப்பற்றியதே யொழிய உடம்பைப்பற்றியதல்ல. உயிர் வேறு, உடம்பு வேறு என இரு கூருக்கி உயிரைப்பற்றிய மலத்தைப் போக்குதலும் ஒரு முறை. அதாவது சம்ஹாரம் செய்து உயிரைப் புனிதப்படுத்துவதாகும். இம்முறையே இரணியாக்ஷன், இரணியகசிபு, இராவணன், கும்பகர்ணன், தந்தவக்ரன், சிசுபாலன் என்றவர்கள் விஷயத்தில் கையாளப்பட்டதெனவைணவ நூல்களும் கூறும். இம்முறையே சூரபதுமன் விஷயத்திலும் கையாளப்பட்டது.

முருகவேள் சூரபதுமனேடு போர் புரிந்த விவரங்களைக் கந்த புராணத்தில் பரக்கக் காணலாம். போர் முடிவில் சூரபதுமன் முருகவேள் திருவடியை யடைந்து தனது ஆணவ மலத்தை அறவே யொழித்துச் சேவலும் மயிலுமாக அக்கடவுளுக்குக் கொடியாகவும் ஊர்தியாகவும் இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். முருகவேள் அவ்வாறே அருள் செய்தார்.

விரித்த தோகையை யுடைய மயிலின் மீது வள்ளி தேவசேனை யென்ற இரண்டு தேவிமாரோடு வேலாயுதமும் கோழிக் கொடியும் விளங்க ஆறுமுகங்களோடு முருகக் கடவுளை வணங்குவது தமிழ் நாட்டினர் பெருவழக்காகவிருக்கிறது. இத்தகைய உருவத்தின் பல பகுதிகளிலடங்கியுள்ள எண்ணிறந்த தத்துவ உட்கருத்துக்களை விரிக்கிற் பெருகும். பொதுவாக ஓங்காரத்தின் நடுவில் இச்சா ஞான கிரியா சத்திகள் பொருந்த இறைவன்விளங்குகிருன் என்பது உண்மையாகும்.

சூரபதுமன் உடல் இரண்டு கூருக்கப்பட்டு, ஒரு கூறு மயிலாகவும், மற்ருென்று சேவலாகவும் மாறிற்றென்று புராணம் கூறும். மயில் கம்பீரமாக நடப்பதற்கும் இருண்ட மேகத்தைக் கண்டபோது தோகையை விரித்து ஆடுதற்கும் பிரியமுள்ளது. பொதுவாக ஆணவ மலச் செயல் மயிலினிடத்தில் பொருந்தி யிருக்கும். ஆங்கிலத்தில் கர்வத்தோடு கம்பீரமாக நடக்கும் ஒருவனை மயிலைப்போல் ஓய்யாரமாய் நடக்கிருன் (He struts like a peacock) என்று கூறுவது வழக்கம். மயிலை ஆணவ மலத்துக்கு அறிகுறியாக (Symbol) வைத்துக் கொள்ளலாம். சூரபதுமன் முருகவேள் திருவடி பொருந்த மயிலை ஊர்தியாக வைத்துக்கொள்ள வேண்டினன் என்று முன்னரே கண்டோம். அதாவது மல நீக்கம் பெற்ற ஆன்மா ஆணவ மலத்தை இறைவன் திருவடிக்கே அர்ப்பணம் செய்யும் என்ற உண்மை இதினின்றும் புலனுகும். எனவே அருணகிரி நாதர் "ஆடும்பரி" என்று தொடங்கியதின் பொருத்தம் விளங்கா நிற்கும்.

வேலாயுதம் வெற்பைத் தொளைத்தும் வேலையை வறட்டியும் சூரனைக்

187147 30.3.10

கொன்றும் பல கிரியைகள் புரிந்த போதிலும் அதை முருகவேள் கிரியா சத்தியாகக் கொள்ளாது ஞான சத்தியாகக் கொள்வது தான் ஆகம நூற்றுணிபு. நன்கு ஆராய்ந்தால் இவ்வுண்மை விளங்கும். எத்தகைய கிரியை புரிந்த போதிலும் ஆணவ மல நீக்கத்தையே வேலாயுதம் விளைவித்தது. ஆகவே ஞான சத்தி யென்றே அதைக் கொள்வது தான் முறையாகும். எனவே அருணகிரி நாதர் அர்ப்பணம் செய்யப்பட்ட ஆணவ மலத்தையும் அர்ப்பணத்தை ஏற்றுக் கொண்ட திருவடியையும் முதலில் நினைவுறுத்திப் பின்னர் அவ்வர்ப்பணத்துக் கேதுவாயிருந்த ஞான சத்தியாகிய வேலை அறிவுறுத்தியதும் பொருத்தமேயாகும்.

இனி அருணோதய காலத்திலேயே ஓங்கார சப்தத்தை முழக்கி ஒளியை எதிர் கொண்டழைத்து இன்புறும் கோழியைக் கொடியாகக் கடவுள் உயர்த்தியதின் பொருத்தத்தைத் தத்துவ நூல் வல்லுநர் மிகை படக் கூறுவர். எனவே அருணகிரிநாதரும் பிரணவம் சாதனம் ஆதலையும் பிரணவ உச்சாரம் திருவடிப் பேற்றிலேயே நிலைக்கச் செய்யும் சக்தியுடைத் தென்பதையும் அறிவுறுத்தவே இறுதியில் "அணி சேவல்" என்றனர். "ஆடும்பரிவேலணி சேவலெனப் பாடும் பணியே பணியாயருள்வாய்" என்று வேறு பணியில்லாது இதையே பணியாக வகுக்குமாறு வேண்டியதின் பெற்றி மேற் கூறிய வாற்றான் விளங்கா நிற்கும்.

இத்தகைய தொடக்கத்தை யுடைய கந்தரநுபூதியை நாடோறும் பயில்வதோடு பொருளாராய்ச்சி செய்துபயன் பெறுமாறு நண்பர்களை வேண்டிக் கொள்கிறோம். அடுத்து வரும் கந்தர் சஷ்டி யன்றுவது இவ்வரிய தொண்டில் ஈடுபடுவார்களென்று எண்ணுகிறோம்.

"சொல்லற் கரியானைச்
சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின்
பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி
னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து"

---

சைவ சித்தாந்த மகா சமாஜ

# வெள்ளி விழா முன்னுரை

## 29-8-1930

"நவசக்தி" ஆசிரியர்

[திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் நிகழ்த்தியது]

### "நினைப்பவர் மனம்"

"குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி"
—மாணிக்கவாசகர்.

சகோதரிகளே! சகோதரர்களே!

நிலமடந்தையின் நெஞ்சத் தாமரையென்று போற்றப் பெறுந் திருச்சிற்றம்பலம் முதலிய திருப்பதிகளைத் தன்னகத்தே கொண்டு, காலம் விழையுங் குரவன்மார், அடிகண்மார், அறவோர், துறவோர், நாவலர், பாவலர் முதலியோர் அவ்வப்போது தோன்றுதற்குரிய நிலைக்களன்களுள் ஒன்றாய்த் திகழ்ந்து, மன்பதைக்கு நலஞ்செய்து வரூஉந் தென்னார்க்காடு ஜில்லாவின் ஒரு பாங்கர், சைவசித்தாந்த மகா சமாஜத்தின் வெள்ளி விழாக் கூட்டம் இன்று கூடியிருக்கிறது. இக்கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்பேற்றை எனக்கு வழங்கிய சமாஜ அமைச்சுக் குழுவினர்க்கும், வரவேற்புக் கூட்டத்தார்க்கும், ஈண்டு ஈண்டியுள்ள மற்ற அன்பர்கட்கும் எனது நன்றி யறிதலைச் செலுத்துகிறேன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இச்சமாஜம் கெடில நதிக் கரையில், திருப்பாதிரிப் புலியூரில், ஞானியார் சுவாமிகள் மடத்தில், சுவாமி வேதாசலம், அறிஞர் நல்லசாமி பிள்ளை முதலியோர் முயற்சியால் காணப்பட்டது. அதன் வெள்ளி விழா, கெடில நதிக்கரையிலேயே, சைவக் கண்கள் இரண்டு பிறந்த இருபெரும் பதிகளின் நடுவண் ஒளிருங் கிழக்கு மருதூர்க்கண், திருச்சிற்றம்பல இல்லத்தில், வழிவழிச் சைவத் தொண்டாற்றி, அப்பர் சுவாமிகளிடத்து அன்பு செலுத்திப் பேரும் புகழும் பெற்ற பெருங் குடியிற்றோன்றிய சைவச் செல்வர் - திருவாளர் - கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் புதல்வரும், சைவ இளைஞருலகின் உயிரனையாரும், எனது கெழுதகை நண்பரும், உழுவலன்பருமாகிய திருமிகு - நாராயணசாமி யென்னும் நம்பி, திருவாளர் - வெ. பாலகிருஷ்ண நாயுடு அவர்களின் புதல்வி திருமிகு - அலர்மேல் அம்மாள் என்னும் நங்கையை வாழ்க்கைத் துணையாக் கொண்ட திருமணப் பொலிவு கொலுவீற்றுள்ள இவ்வேளையில் நடைபெற நேர்ந்தமை குறித்து மகிழ்வெய்துகிறேன். குவளைக்கண்ணி கூறன் திருவருளால் மணமக்கட்கு நலம் பெருகுக பெருகுக என்றுவாழ்த்துக் கூறி, எனது பணிமேற் செல்கிறேன்.

இருபத்தைந்தாண்டுகளாக ஒல்லும் வகை முயன்று, சைவசித்தாந்த மகா சமாஜம் சமயத் தொண்டாற்றி வருகிறது. அதன் நிகழ்ச்சி முறைகள் அதன் சார்புப் பத்திரிகையாகிய "சித்தாந்த"த்தில் அவ்வப்போது வெளி வந்திருக்கின்றன. சமாஜம் தோன்றிய நாள்முதல் இன்று வரை, அதன் நலன் கருதி யுழைத்துவந்த அன்பர்கட்கெல்லாம் எனது வணக்கம் உரியதாக.

இவ்வெள்ளிவிழாக் கூட்டத்தில் அப்பர் அருண் மொழிகளுள் ஏதாவதொன்றைக் குறிக்கோளாக் கொண்டு தலைமையுரை வழங்குமாறு மணமகனும் மற்றுஞ் சிலரும் விரும்பினர். அவர் விரும்பியவாறே அப்பர் அருண் மொழிகளில் எனது உளத்தைச் செலுத்தித் துழவினேன். ஒரு திருப் பாட்டில் எனது நெஞ்சம் படிந்தது. அது வருமாறு:—

"பனைக்கை மும்மத வேழ முரித்தவன் [வண்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்ட
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ"

இத்திருப்பாட்டில் இரண்டாம் அடியாக அமைந்துள்ள "நினைப்பவர் மனங் கோயிலாக்கொண்டவன்" என்பதைத் தழுவித் தலைமையுரையைச் சுருக்கமாக நிகழ்த்த முயல்கிறேன். குற்றங் குறைகளைப் பொறுத்தருளுமாறு உங்களை வேண்டுகிறேன்.

"நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்னுஞ் சீரடியை உற்று நோக்குவோம். முதலாவது, ஆண்டவன் தன்னை நினைப்பவர் நெஞ்சங் கோயிலாக் கொண்டானெனில், அவன் தன்னை நினையாதார் நெஞ்சங்

கோயிலாக் கொண்டில்லையோ என்னும் ஐயம் பிறக்கிறது. இவ்வையம் பிறத்தல் இயல்பு. ஆண்டவன் ஓரிடத்திற் கோயில் கொண்டு, மற்றோரிடத்திற் கோயில் கொள்ளாதவனல்லன். அவன் நீக்கமற யாண்டும் நிறைந்து நிற்பவன். அவன் ஓரிடத்தை விரும்பிக் கொள்வோனு மல்லன்; மற்றோரிடத்தை வெறுத்துத் தள்வோனு மல்லன். அவன் வேண்டுதல் வேண்டாமை யில்லாதவன். அவன் கோயில் கொள்ளல் கொள்ளாமை அவனைப் பொறுத்தன வல்ல. அக்கொள்ளல் கொள்ளாமை உயிர்களின் நிலையைப் பொறுத்து நிற்பனவென்க.

கதிரொளி யாண்டும் ஒரு தன்மையதாகவே படர்ந்து நிற்கிறது. அவ்வொளிக்கு ஒருவரிடம் விருப்பும், இன்னொருவரிடம் வெறுப்புமில்லை. அவ்வொளியின்பத்தைக் குருடன் நுகர்கிறானா? இல்லையே. இக்குறைபாடு கதிரொளியின் பாலதா? குருடன் பாலதா?

மின்சாரம் யாண்டும் நிலவுகிறது. யாண்டும் நிலவும் அது யாண்டுங் காட்சியளிக்கிறதோ? இல்லை. பின்னை அது யாண்டுக் காட்சி வழங்குகிறது? அதைத் தொழிற் படுத்தி, ஒழுங்கு செய்யுமிடத்தில் அது காட்சி வழங்குகிறது. சிற்சில விடங்களில் மின்சாரம் விளங்கித் தோன்றுவது கண்டு, மற்றைய விடங்களில் அஃது இல்லையென்று கூறுவது பொருத்தமாகுங்கொல்!

கதிரொளியைப் போலவும், மின்சாரத்தைப்புரையவும் ஆண்டவன் திருவருள் விளங்குகிறது. ஆண்டவன், தன்னருளை எல்லாவிடங்களிலும் விருப்பு வெறுப்பின்றிப் பொழிந்துகொண்டிருக்கிறான். மெய்யறிவு விளங்கப் பெற்றோர்க்கு அது புலனாகும். ஏனையோர்க்கு அது புலனாகாது. உயிர்கட்குப் புலனாதல், புலனாகாமை முறையே ஆண்டவன் கோயில்கொள்ளல், கொள்ளாமையென்று வழங்குதல் மரபு.

கவலையால் பெரிதும் பீடிக்கப்பட்ட ஒருவன், மண்ணில் நடந்துகொண்டே மண்ணை மறந்துவிடுகிறான். மண்ணுமிருக்கிறது; அதன்மீது நடையும் நிகழ்கிறது. ஆனால் நடப்பவன் நிலையென்ன? அவன் கவலை, அவனைத் தாங்கும் மண்ணையே மறைத்துவிட்டது.

இவ்வாறே எல்லாவற்றிற்குந் தாரகமாக ஆண்டவன் திருவருள் நிற்கிறது. அதை ஞானிகள் உணர்கிறார்கள். மற்றவர்கள் உணர்கிறார்களில்லை. ஈண்டு உணரல் உணராமை யாருடையன?

ஆண்டவன் உயிர்களிடைக் கோயில் கொண்டிருத்தலை உயிர்கள் உணரும் நிலையொன்று; உணரா நிலையொன்று. முன்னையது ஞானநிலையென்றும், பின்னையது அஞ்ஞான நிலையென்றுஞ் சொல்லப்படும். இவ்விரு நிலைகளும் உயிர்களின்பாற் பட்டன வாகலின், "நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்றும், "நினையாதார் மனங் கோயிலாக் கொள்ளாதவன்" என்றும் ஆண்டவனைக் கருதலாகாது. ஆகவே இதைப்பற்றி ஐயுற வேண்டுவதில்லை.

"நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்னும் அடிக்கண் போந்துள்ள "கொண்டவன்" என்பது, புதிதாக ஓரிடங்கொள்வதைக் குறிப்பதன்று. அது முன்னரே (கோயில்) கொண்டமையைக் குறிப்பதென்க. இதனைச் சுவாமிகள் மற்றுமோரிடத்திலும் "என் மனமே சென்றுபுக்கனன் போந்த சுவடில்லையே" என்று விளக்கியுள்ளார்கள். "போந்த சுவடில்லையே" என்பது புதிதாகப் புகுதலைப் புகல்வதன்று.



ஆண்டவன் பண்டே நெஞ்சங் கோயில் கொண்டுள்ளான். அவன் நினைவு அதை யுணர்த்துவதாகிறது. அப்[illegible]க்துணர்விற்கு ஆண்டவன் நெஞ்சில் புகுந்[illegible]துபோலத் தோன்றுதல் இயல்பு. உண்மையில் ஆண்டவன் புதிதாக யாண்டும் புகுதலில்லை யென்க. "பூவினிற் கந்தம் பொருந்தியவாறு போல் - சீவனுக்குள்ளே சிவ மணம் பூத்தது" என வரூஉந் திருமூலர் திருவாக்கை யோர்க. "மலர்மிசை ஏகினான்" என்னும் வள்ளுவர் வாக்கும், அதற்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரைக் குறிப்பும் ஈண்டு உன்னற்பாலன.

ஆண்டவன் நெஞ்சில் கோயில்கொண்டிருத்தலை உயிர்கள் உணராதவாறு அறியாமை தகைந்து நிற்கிறது. அறியாமை ஒடுங்க ஒடுங்க ஆண்டவன் நெஞ்சில் கோயில் கொண்டிருத்தல் உயிர்கட்குப் புலனாகும்.

உயிர்கட்கு அறியாமைக் கட்டிருத்தல் வெள்ளிடைமலை. கற்றல் கேட்டல் முதலியவாற்றான், பல பொருள்களைப் பற்றிய அறியாமை நீங்கிச் சிற்றறிவு விளங்குதலை அநுபவத்தில் பெறுகிறோம். இதனால், முழு அறியாமை யொடுக்கமும், முழு அறிவு விளக்கமும் என்றாதல் ஒருபோது உற்றே தீரல்வேண்டுமென்பதை யூகித்துணரலாம்.

உயிர்கள் அறியாமையினின்றும் விடுதலை யடைவதே வீடுபேறென்பது. அவ்வீடுபேற்றிற்கு உயிர் எதைப் பற்றுதல் வேண்டும்? தன்னைப்போன்ற கட்டுடைய ஒன்றை[illegible]ப் பற்றுதல்வேண்டும்? குருடன் குருடனை வழிகாட்டியாக்கொள்ள விழைதலுண்டோ? கட்டுடைய ஒன்று கட்டிலா ஒன்றைப் பற்றுவதே நியாயம். "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் - பற்றுக பற்று விடற்கு" என்றார் திருவள்ளுவனார்.

ஆண்டவன் இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவனாய், முற்றறிவுடையனா யிருப்பவன். அவனைப்பற்றினால் உயிர்கள் கட்டினின்றும் விடுதலை அடைந்து இன்பந் துய்த்தல் உறுதி. ஆண்டவனைப் பற்றுவது எப்படி?

அதற்குரிய வழிகள் பலப் பல. அவைகளுள் எளியதும், விரைவில் பேற்றை யளிக்கவல்லதுமா யிருப்பது ஒன்று. அதுவே ஆண்டவனை நினைத்தல் என்பது. நினைத்தலை, நெஞ்சால் பற்றுவது என்றுஞ் சொல்லலாம். இதனைத் தியானயோகம் என்றுங் கூறுப. தியானம் உயிர் நலனுக்கு இன்றியமையாதது.

ஆண்டவனை நினைந்துநினைந்து உருக உருக, அவன் நெஞ்சங் கோயில் கொண்டிருத்தலை யுணர்ந்து வீடுபேறெய்தலாகும். வேண்டற்பாலது ஆண்டவன் நினைவு நினைவு என்று வலியுறுத்துகிறேன். அநுபவத்தில் ஆண்டவன் நினைவின் விழுப்ப முணர்ந்த ஆன்றோர்கள், பின் வருவோரை நோக்கி "ஆண்டவனை நினையுங்கள் நினையுங்கள்" என்று அருளிப் போந்த பொன்னுரைகள் மலைக்குலங்களெனத் திரண்டு கிடக்கின்றன. அவைகளை எவ்வளவு படித்தாலும் இப்பாழு நெஞ்சந் திரும்புகிறதா?

ஆண்டவன் நினைவுக்கென்றே நெஞ்சம் அமைக்கப்பட்டிருக்கிறது; நெஞ்

...ங்கள் வகுக்கப்பட்டிற்கெனக் கரணங்... கென உடலடிருக்கின்றன; கரணங்கட்...லுக்கென வழங்கப்பட்டிருக்கிறது; உலகம் முதல உலகம் வாழ்வு கல்வி செல்வ...த்தின் விய எல்லாம் அளிக்கப்பட்டிருக்கின்றன. நெஞ்சந் திரும்பி ஆண்டவ... பற்றினால், பிறவெல்லாம் அதன் வ... நின்று, ஆண்டவன் வயப்படும். ஆண்டவன் நினைவிற்கென்றே இவையாவும் வழங்கப்பட் டிருக்கின்றன. இவைகளைப் பெற்றும் ஆண்டவனை நினையாத நெஞ்சை என்னென்று கூறுவது? ஏ! மடநெஞ்சே! பாழ் நெஞ்சே! "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாத" நாளாகும். ஆதலால் "நெஞ்சே! நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை;" நெஞ்சே! "நீதியால் அவனை நினைசெய்"

"தோற்றமுண்டேல்மரணமுண்டு" என்பது வன்றொண்டர் வாய்மொழி. என்றாதல் பருவுடல் மறைதல் ஒருதலை. மறைந்த ஒன்று மீண்டும் வருதல் வேண்டுங்கொல்? மீண்டும் பிறவா நிலை தேடிக் கொள்ளலே அறிவுடைமை. "இக்காய நீக்கி இனி யொரு காயத்திற் - புக்குப் பிறவாமற் போம் வழிதேடுமின்" என்றார் திருமூலர். அதற்கு என் செய்தல் வேண்டும்? நல்ல யாக்கையுள்ள போதே தோற்றக் கேடில்லாத ஆண்டவன் நினைவில் உறைந்து நிற்கப்பயிலல் வேண்டும். பருவுடல் மறையுங்கால் தோன்றாத் துணையாய்ச் செல்வது எது என்று நினைந்து பாருங்கள். அதை நினைக்க நினைக்க ஆண்டவன் நினைவின் இன்றியமையாமை புலப்படும்.

"ஆண்டவன் நினைவின் இன்றியமையாமை தெரிகிறது; ஆண்டவனை நினைக்கவும் நெஞ்சம் எழுகிறது; ஆனால் உயிர்ச்சார்பும் பொருட்சார்பும் இடையூறாக நிற்கின்றன" என்று சிலர் சொல்கிறார். இஃது அறியாமை. ஆண்டவனை நினைத்தற்கு மனைவி மக்களைத் துறத்தல் வேண்டு மென்றும், வீடு வாசல்களை வெறுத்தல் வேண்டுமென்றும் நினைப்பதே ஆண்டவன் நினை... குக் கேடு சூழ்வதாகும். உயிர்ச்... விற் ...ம் பொருட் சார்பையும் ...சார்பை ... ஆண்டவன் நினைவிற்... பயன்படுத்தி வாழ்வதே சிறந்த இன்ப அன்பு வாழ்வாகும். அவைகள் யாவும் வாழ்விற்கென்று ஆண்டவனால் அளிக்கப்பட்டன. அவைகளை வெறுப்பது ஆண்டவனை வெறுப்பதாக முடியும்.

உயிர்ச்சார்பு பொருட் சார்புகளை மாயை யென்றும், கட்டென்றும் பெரியோர்கள் இழித்துக் கூறிய தன் நோக்கமென்னை யென்று சிலர் வினவலாம். உயிர்ச்சார்பு பொருட்சார்புகளை ஆண்டவன் நினைவிற்கு அரணாகக் கொள்ளாது, அவைகளையே பொருளாக் கொண்டு, ஆண்டவனை மறந்து, மதி மயங்கித் திரியும் உலோகாயதர்கட்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த வேண்டிப் பெரியோர்கள் அவைகளை இழித்துக் கூறினார்கள். அவர்கள் கூற்றுக்களின் உள்ளக்கிடக்கையுணராது, வெறுத்தல் துறத்தலில் கருத்திருத்துவது இழுக்காகும்.

நமது நாட்டில் இடைக்காலத்தில் ஒருவித போலித்துறவு தோன்றலாயிற்று. அது மக்கள் வாழ்வையே குலைத்துவருகிறது. இது குறித்துப் "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை", "முருகன் அல்லது அழகு", "மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்" முதலிய நூல்களின் வாயிலாக எனது கருத்தை விரித்துக் கூறியுள்ளேன்.



நமது ஆண்டவன் அம்மையப்பன்; சோமாஸ்கந்தன். அவனை வழிபட்டுப் பேறெய்திய நாயன்மார்களிற் பலர் மனைவி மக்களைத் துறந்தவரல்லர்; வீடு வாசல்களை விடுத்தவரல்லர். அவர்கள் உள்ளன வெல்லாம் "எம்பிரானுடைமை" என்று இல்வாழ்வு நடாத்திப் பேறெய்தியவர்கள். அவர்கள் அடிச்சுவட்டைப்பற்றி நடக்க வேண்டுவது நமது கடமை. ஆகவே ஆண்டவன் நினைவிற்கென்று வீட்டையும் விட வேண்டுவதில்லை; காட்டுக்கும் ஓட வேண்டுவ தில்லை. வீட்டிலிருந்தே, மனைவி மக்களுடன் வாழ்ந்தே ஆண்டவனை நினைக்கலாம்.

ஆண்டவன் நினைவிற்கென்று குறிப்பிட்ட புறக்கட்டுப்பாடு ஒன்றும் வேண்டுவதில்லை. கரவில்லா அன்புளங்கொண்டு எந்நிலையில் நின்றும் எக்கோலம் பூண்டும் ஆண்டவனை நினைக்கலாம். "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் - மன்னியசீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே" என்பது பெரியபுராணம்.

ஆண்டவனை எப்பொழுது எப்படி நினைப்பது? ஆண்டவனை இந்நேரத்தில் நினைத்தல் வேண்டு மென்னும் நியதியில்லை. ஆண்டவனை எந்நேரத்திலும் நினைக்கலாம். வாய்ப்பு நேரும் போதெல்லாம் ஆண்டவனை நினைந்து நினைந்து, அந்நினைவை இடையறாத ஒன்றாக்கிக் கொள்ளல் வேண்டும்.

குறிக்கோளாக எடுத்துக் கொண்ட திருப்பாட்டின் இறுதியடியை நோக்குக. "தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ" என்று அப்பர் அலமருகிறார். தினைப் பொழுது ஆண்டவனை மறந்தால், அப்பொழுதில் எத்துணையோ தீய நினைவுகள் தோன்றும். அவைகள் உய்யு நெறியை யிடர்ப்படுத்தும். ஆதலால் இடையீடின்றி ஆண்டவனை நினைத்தல் வேண்டுமென்று அப்பர் அறிவுறுத்துகிறார். "எந்நேரமுஞ் சிவனை ஏத்துங்கள் போற்றுங்கள்" என்றும், "நின்று மிருந்துங் கிடந்தும் நினைசெய்க - என்றுஞ் சிவன்தாள் இணை" என்றும் ஆன்றோர்கள் கூறிப் போந்தார்கள். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே - வழுவா திருக்க வரந்தரல் வேண்டும்" என்னும் அடிகளின் வாக்கு ஆண்டவனிடத்து இடையறாத நினைவின் இன்றியமையாமையை வலியுறுத்தல் காண்க.

இடையறாத நினைவு தொடக்கத்தில் உறுதல் அருமை. பின்னே பின்னே நாளடைவில் அவ்வருமை நீங்கும். இதற்கு உயிர்களின் முயற்சியுடன் ஆண்டவன் திருவருளும் ஒன்றுதல் வேண்டும். பாவத்துக்கஞ்சிச், செய்த பாவங்களை முறையிட்டு, அழுக்காறு முதலிய குற்றங்களைக்களைந்து, ஆண்டவன் திருவடிப் பற்றையே பற்றாக் கொண்டு, அத்திருவடியை நினைந்து நினைந்து உருகியுருகிக் கண்ணீர் சொரிந்து அழ அழ, ஆண்டவன் திருவருட்டுணை தானேவரும். இடையறாத நினைவிற்குத் திருவருட்டுணை பெரிதும் வேண்டற்பாலது. பாவச் செயல்களை வெறுத்து, ஆண்டவன் திருவடி நினைவில் உயிர்கள் கொள்ளும் வேட்கையளவினதாகத் திருவருட்டுணை கிடைக்கும்.

ஆண்டவன் நினைவை இடையறாத ஒன்றாக்கிக் கொள்வதற்கு எப்படி அவனை வழிபடுவதென்பதிற் சிறிது கருத்துச் செலுத்துவோம். முறைகள் எண்ணிறந்து கிடக்கும். ஒவ்வொரு

வர்க்கு ஒவ்வொரு முறையிருக்கலாம். அவைகளில் நுழைந்து மல்லாடவேண்டுவதில்லை.

முதலாவது அலையும் நெஞ்சை ஆண்டவன் நினைவில் நிலை பெறுத்த முயல்வது ஒழுங்கு. அலையும் நெஞ்சு எங்குமுள்ள ஆண்டவனை எவ்வாறு நினைக்க வல்லதாகும்? பரம் பொருள் அகண்டமாயிருப்பது. அகண்டமாவது மனதின் எல்லை கடந்து நிற்பது. எல்லைகடந்த ஒன்றை மனம் எங்ஙனம் நினைக்கும்? ஆதலால் தொடக்கத்தில் ஆண்டவன் நினைவூட்டக்கூடிய ஒரு குறியில் நெஞ்சை நிலை பெறுத்தப் பயிற்சி செய்தல் வேண்டும். அக்குறி, கண்ணையுங் கருத்தையுங் கவரக் கூடிய வனப்புடையதாய், ஓவியம்நிரம்பியதாயிருத்தல் மிகச் சிறப்பாகும். அக்குறியின்கண் நெஞ்சம் படியப் படிய அலைதல் ஒழிந்து நிலைதல் பெறும். அந்நிலைத்த நெஞ்சில் வேறு எண்ணங்கள் அருகுதலும், ஆண்டவன் எண்ணம் பெருகுதலும் இயல்பில் நிகழும். இதற் கென்றே திருக்கோயில் வழிபாடு ஏற்படுத்தப்பட்டது.

திருக்கோயில் வழிபாட்டின் நோக்கம் விழுமியது. அதன்கண் உயிர் நலனுமுண்டு; உடல் நலனுமுண்டு. இந்நுட்பம், "நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப் - புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் - தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும் - அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும் ஆரூரா என்றென்றே அலறாநில்லே" என்னும் திருத்தாண்டகத்தில் செறிந்து விளங்குதல் காண்க.

நிலைத்த நெஞ்சம் பெறுதற்கென ஏற்பட்ட கோயில்களிற் பல இப்பொழுது எந்நிலையுற்றிருக்கின்றன? அவைகள், அலையும் நெஞ்சை இன்னும் அலைக்கும் பேய்க் கூடங்களாகி விட்டனவென்று சுருங்கச் சொல்கிறேன். அக்கூடங்களில் தற்போது ஒருவித பேயா ஆடுகிறது? எத்தனையோவித பேய்கள் தலை விரித்தாடுகின்றன. சாதிப்பேய், கட்டுப்பேய், துட்டுப்பேய், வழக்குப்பேய், போட்டிப்பேய், சூதுப்பேய், வாதுப் பேய், பொய்ப் பேய், காமப்பேய், சோற்றுப்பேய் முதலிய பேய்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பேய்களை யோட்டச் சில அறவோர் முயன்று வருகிறார். அவர்களை மனமார வாழ்த்துகிறேன்.

'கோயில்' என்னும் பொருளிழந்து, வெறுங் கோபுரங்களையுங் கட்டிடங்களையுந் தாங்கி நிற்கும் நிலையங்களின் தற்கால நிலைகண்டு, சிலர் ஆண்டவன் வழிபாட்டையே மறுக்கப் புகுகிறார். அது தவறு. அந்நிலையங்கள் மீது கொண்ட சீற்றத்தை ஆண்டவன் வழிபாட்டின்மீது செலுத்துவது அறமாகாது. தொன்மை நோக்கத்தினின்றும் வழுக்கி வீழ்ந்துள்ள நிலையங்களில் புகாமலும் ஆண்டவனை வழிபடலாம். எந்த விடத்தையும் நல்லெண்ணத்தால் கோயிலாக்கிக்கொள்ளலாம். கோயில் என்பது வெறுங் கோபுரந் தாங்கியன்று. ஆண்டவன் நினைவூட்டி, அந்நினைவை நிலை பெறுத்தும் இயல்பு வாய்ந்த இடம் கோயிலாகும்.

மனதைக் கோயிலாக்கவே தொடக்கத்தில் சில விடங்களைக் கோயில்களாகக் கொள்கிறோம். "நாடு நகரமும் நற்றிருக் கோயிலும் - தேடித் திரிந்து சிவபெருமான் என்று - பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின் - கூடிய நெஞ்சத்துக் கோயில் கொள்வானே" — இது திருமந்திரம். நமது குறிக்கோள் நெஞ்சைக் கோயிலாக்க வேண்டுமென்பதே யாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள யாண்டாதல் உருவ வழிபாடு செய்யலாம்.



வழிபாட்டுக்கு எவ்வுருவைக் கொள்வது? எவரெவர் நெஞ்சம் எவ்வெவ்வுருவில் கவர்ச்சி பெறுகிறதோ அவரவர் அவ்வவ்வுருவைக் கொள்வாராக. உருவம் ஆண்டவன் நினைவுக்கு அறிகுறியே யாகும். ஆண்டவன் நினைவூட்டும் உருவம் எதுவாயினுமாக. பன்னிறப் பசுக்கள் பன்னிறப் பாலையா சொரிகின்றன?

எவ்வுருவைக் கொள்ளினும் அவ்வுரு ஆண்டவன் நினைவூட்டக்கூடியதாயிருத்தல் வேண்டும். ஆண்டவன் ஒருவனே. அவனை எவ்வுருவில் வழிபட்டாலென்னை? இதனை "அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை" என்று மூன்றாமடியில் அப்பர்சுவாமிகள் குறிப்பாலுணர்த்துகிறார்கள். "அப்பனை நந்தியை ஆரா அமுதினை, ஒப்பிலி வள்ளலை யூழி முதல்வனை, எப்பரி சாயினு மேத்துமி னேத்தினால், அப்பரி சீச னருள்பெற லாமே" என்றார் திருமூலர். "ஒருவனே இராவணாதி பாவகம் உற்றாற் போலத் - தருவனிவ் வுருவ மெல்லாம் தன்மையுந் திரியா னாகும்" என்பது சிவஞான சித்தி.

அழகிய ஓர் உருவில் மனம் ஒன்றிப் படியப் படிய மனதில் ஒருவித ஆற்றல் பிறக்கும். அவ்வாற்றல், ஆண்டவன் வேட்கை பெருகவும், மற்ற வேட்கைகள் சுருங்கவுந் துணை செய்வதாகும். நாளடைவில் மனதின் அலை அடங்கும்; மறவினைகளில் தோய நெஞ்சம் அஞ்சும்; நெஞ்சில் அமைதியும் ஒருமைப்பாடும் உறும்; நிலைத்த நெஞ்சம் உண்டாகும். இந்நிலையில் ஆண்டவன் திருவருளால் குருநாதன் தோன்றி மெய்ப்பொருளை அறிவுறுத்துவன். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற்றொடங்கினர்க்கோர் - வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று தாயுமானார் அருளிய அநுபவ மொழியை நோக்குக.

மெய்க்குரவன் காட்சிக்குப் பின்னை மனதில் உறும்மாறுதல்கள் பலப்பல. அவைகளுள் ஒன்று ஒருவித ஒளியெழுச்சி. அவ்வொளி தானே வலிந்து உயிரை இயற்கை வழிபாட்டில் உந்தும். இயற்கை வழிபாட்டு முறைகளை ஈண்டு விரிக்கிற்பெருகும். இன்னுஞ் சில சொற்பொழிவுகள் இங்கே நடைபெறல் வேண்டும். உங்கள் அரிய காலத்தை யானே கொள்ளை கொள்ள விரும்புகிறேனில்லை. இயற்கை வழிபாட்டைப்பற்றி "முருகன் அல்லது அழகு" என்னும் நூலில் சிறிது விரித்துக் கூறியுள்ளேன்.

இயற்கை வழிபாடுகள் பல திறத்தன. அவைகளுள் சிறந்தது ஞாயிறு வழிபாடு. ஞாயிறு வழிபாடு பழைய பழைய மாசுகளைக் கடிந்து உயிரை ஒளி மயமாக்கும். அவ்வுள்ளொளி, இயற்கை உடலாகவும், இறை அதன் உயிராகவும் உள்ள நிலையைப் புலப்படுத்தும். இது, தன்வழிபாடென்னும் உயிர் வழிபாட்டைக் கூட்டும்.

தன்னில் ஆண்டவனை நினைந்து நிகழ்த்தும் வழிபாடு, தன்னிலுந் தன்னனைய உயிர்களிலும் ஆண்டவன் கோ

யில் கொண்டிருத்தலை யுணர்த்தும். இவ்வுணர்வு உயிர்கட்கு விடுதலை நல்கும்.

தன்பால் கோயில் கொண்டுள்ள ஆண்டவன் மற்ற உயிர்களிடத்துங் கோயில் கொண்டிருத்தலை யுணரும் ஒருவன் எவ்வுயிர்க்காதல் தீங்குசெய்ய நினைப்பனோ? எவனுந் தன்னுறுப்புக்குத் தானே தீங்கு செய்ய உடன்படான். தன்னுயிரும் பிறவுயிரும் ஆண்டவனுக்கு உறுப்புக்களாக இருத்தலை யுணரும் ஒருவன், பிறவுயிர்க்குத் தீங்கு நினையான்.

எல்லா உயிரையுந் தன்னைப்போல் பார்க்கும் ஒரு நிலை ஆண்டவனைப் படிப் படியாக நினைப்பதால் கூடுவதாகும். இந்நிலை வாசா கைங்கரியத்தால் கூடாது. உயிர்கள் வழிபாடு என்று வாயால் பேசுவதால் பயன் விளையாது. உயிர்கள் வழிபாடு என்று வாயால் பேசிக்கொண்டு, உயிர்கள் மாட்டுப் பகை பூசல் இகல் முதலியவற்றை வளர்த்து வருவது உயிர்கள் வழிபாடாகாது.

இந்நாளில் மன்பதைக்கண், நாடு, நிறம், மொழி, வகுப்பு, சமயம் முதலிய பெயர்களால் பகைமை பூசல் இகல் முதலியன வளர்ந்துவரல் கண்கூடு. இப் பிரிவுகளையும் பிணக்குகளையும் "எவ்வுயிரும் பராபரன் சந்நிதி" என்னும் உணர்வு உண்டாக்குமோ? அன்பர்களே! உன்னுங்கள்.

இந்நாளில் உலகிடைப் பெரிதும் இம்மெய்யுணர்வை நல்கவல்ல கல்வியுண்டோ? அரசியலுண்டோ? வாழ்வுண்டோ? நாடு நிறம் மொழி சாதி சமயம் முதலிய பெயர்களால் ஒருவரை யொருவர் வஞ்சித்து வருத்தும் [illegible] வாழ்வாகப் பரிணமிக்கிறது? இம்முறை வளர வளர மன்பதைக்கண் அன்பு அருகும். அன்பு அருகினால் மனிதன் என்னாவன்? சொல்லவும் வேண்டுமோ?

எவ்வுயிரிலும் ஆண்டவனுண்மையை யுணர்த்துங் கல்வி, அரசு, வாழ்வு முதலியன உலகிடைப் பரவுதல் வேண்டும். இதற்குச் சமய ஞானம் வேண்டற்பாலது. சமய ஞானமென்று சமய வாதத்தை வளர்த்தலாகாது. சமய வாதங்களே சகோதர நேயத்தைக் கெடுத்து வந்தன; வருகின்றன. ஆண்டவ னுண்மையையும், அன்பு நெறியையும் அறிவுறுத்திச் சென்ற குருமார்கள் பெயர்களால் பல சமயங்களும், அவைகட்கென மடங்களும், சங்கங்களும் பின் வந்தவர்களால் அமைக்கப்பட்டன. அவ்வமைப்புக்கள் கலகத்துக்கும், பிணக்குக்கும், கொலைக்கும் பயன்பட்டு வருகின்றன. அவைகளின் கொடுமைகளே உலகில் நாத்திகத்தைப் பரப்பி வருகின்றன. அவ்வமைப்புக்கள் கட்டுப்பாடுகட்கும் கண்மூடி வழக்கங்கட்குந் தாயகமாகவும் நிற்கின்றன.

சைவசித்தாந்த மகா சமாஜ வெள்ளி விழாக் கூட்டத்திடை யான் பேசுவதால், சைவ மடங்கள்மீது எனது நெஞ்சம் ஓடுகிறது. "எவ்வுயிரும் நீங்கா துறையும் இறை சிவனென்று —எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்னும் அருண் மொழிக்கு இலக்கியமாக எத்துணைச் சைவ மடங்கள் இப்பொழுதிருக்கின்றன? சைவ மடங்கள் சைவத்தை மறந்து நீண்ட நாட்களாயின என்று சொல்கிறேன். "என்ன அநியாயம். சைவ மடங்களில் திருநீறு பொலிகிறது; கண்டிகை மிளிர்கிறது; சிவ பூசை நிகழ்கிறது; என்ன இல்லை;

187147



சைவ மடங்களில் சைவமில்லை என்று கூறலாமா" என்று சிலர் சீறுவர். "சைவ மடங்களில் சைவமில்லை" என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். வெளிவேடம் சைவமாகாது. சைவத்தின் உயிர் அன்பு. அன்புக்குச் சாதி முதலிய வேற்றுமைகளுண்டோ? இது நிற்க.

ஆன்ம நேயத்தை வளர்க்கவல்ல அமைப்புக்கள் இப்பொழுது தேவை. ஆன்ம நேயத்தை வளர்க்க வல்லது எவ்வுயிரிலும் ஆண்டவ னிருத்தலை யுணர்த்தும் உணர்வாகும். 'அவ்வுணர்வைப் பெருக்கத்தக்க கல்வி பரவும் நாளே மன்பதையின் நலத்துக்குரிய நன்னாளாகும்.

எல்லா உயிர்களிலும் ஆண்டவன் கோயில் கொண்டிருத்தலை உணர்த்துவது ஆண்டவன் நினைவே யாகும். ஆண்டவனை ஓர் உருவின் வாயிலாக நினைந்து, பின்னை இயற்கையின் வாயிலாக நினைந்து, பின்னைத் தன் வாயிலாக நினைந்து, ஆண்டவன் உள்ளங் கோயில் கொண்டதை உணர்தல் வேண்டும். இம்முறை பற்றி யொழுகாது "நெஞ்சில் ஆண்டவ னில்லையே" என்று கருதுவது தவறு. ஆண்டவன் கோயில் கொண்டிருத்தலை யுணர நெஞ்சைப் பண் படுத்தல் வேண்டும். அதற்கு ஆண்டவன் நினைவே உறுகருவி போன்றது. இக்கருத்துப் பற்றியே "நினைப்பவர் மனங் கோயிலாக் கொண்டவன்" என்று நினைத்தலை அடிகள் வலியுறுத்திக் காட்டியுள்ளார். நினைப்பவர் நெஞ்சிற்கு ஆண்டவன் கோயில் புலனாதல் ஒருதலை.

ஆண்டவன் கோயிலுக்குரிய இடம் நெஞ்சமாகும். இதனைத் தமிழ் நாட்டிற் றேன்றி அன்பு நெறி வளர்த்த நால்வரும் ஒரு முகமாகத் தொடக்கத்திலேயே உலகிற்கு நினைவூட்டியுள்ளார். திருஞான சம்பந்தப் பெருமான் "தோடுடைய செவியன்" என்னும் முதற்றிருப் பாட்டில் "என்னுள்ளங் கவர் கள்வன்" என்றும், திரு நாவுக்கரசு சுவாமிகள் "கூற்றுயினவாறு விலக்ககிலீர்" என்னும் முதற்றிருச் செய்யுளில் "பிரியாது வணங்குவன்" என்றும், (பிரிந்து வணங்குதல் ஒன்று; பிரியாதுவணங்குதல் மற்றொன்று. முன்னையது ஆண்டவனைத் தன்னில் வேறுபடுத்தி வணங்குவது; பின்னையது அவனைத் தன் மனத்துள் பிரிவின்றி வணங்குவது. இவை முறையே துவித வழிபாடு அத்துவித வழிபாடு` என்றுஞ் சொல்லப்படும்) வன்றொண்டப் பெருந்தகையார் "பித்தா பிறைசூடி" என்னும் முதற்றிருப்பாவில் "நினைக்கின்றேன் மனத்துன்னை" என்றும், வாதவூரடிகள் திருவாசகத் தொடக்கத்தில் "நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க - இமைப் பொழுதும் என் னெஞ்சம் நீங்காதான் றாள்வாழ்க" என்றும் அளிருச் செய்திருத்தலைக் காண்க. நெஞ்சத் தாமரையை ஆண்டவன் திருக்கோயிலென்று அறிவு நூல்களெல்லாம் முழங்குகின்றன.

நெஞ்சகம் உயிர்ப்புக் கிடமாயிருப்பது. அஃது என்றும் தொழில் புரிவது. அதன் இயக்கம் நிற்குமாயின் உயிர் உடலை விட்டுப் பிரியும். நெஞ்சினை யிடமாக் கொண்டே ஆண்டவன் உயிர்களை இயக்குகிறான். "என்னில் யாரும் எனக்கினி யாரில்லை - என்னிலும் இனியா னொருவன் னுளன் - என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு - என்னுளே நிற்கும் இன்னம்ப

நீசனே" என்று அப்பர் சுவாமிகள் அருளினமை காண்க. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம் - வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல் - தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன்சிவ லிங்கம் - கள்ளப் புலனைந் துங் காளா மணிவிளக்கே" என்றார் திருமூலரும். நெஞ்சின் சிறப்பை இன்னும் விரிக்கிற் பெருகும்.

அத்தகை நெஞ்சை - ஆண்டவனுக்குரிய பீடத்தைத்-தூய்மையாக வைத்துப் பாதுகாத்தல் வேண்டும். அதனை அழுக்காறு அவா வெகுளி காவு முதலிய அழுக்குகளால் பாழ்படுத்துவது மடமை. இவ்வழுக்குகளுள்ளவரை ஆண்டவன் கோயில் கொண்டிருத்தல் புலனாதலரிது. ஆதலால் உளத்தைத் தூய்மை செய்க ; செய்க.

நெஞ்சைத் தூய்மைசெய்து, அதனை ஆண்டவனுக்குரிய பள்ளியாக்குவதைப் பட்டினத்தடிகள் திருக்கழுமல மும்மணிக்கோவையிலும், திருவிடைமருதூர் மும்மணிக் கோவையிலும் அழகுபடத் திருவாய்மலர்ந்துள்ளார். அத்திருவாக்குகள் வருமாறு :—

"கருமுதற் றொடங்கிப் பெருநாளெல்லாங் - காமம்வெகுளி கழிபெரும் பொய்யெனுந் - தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை - யரிதினிகழ்ந்து போக்கிப் பொருதிறன் - மையிருணிறத்து மதனுடை யடுசினத் - தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி - யன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித் - துன்ப விருளைத் துரந்து முன்புற - மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய - கீழ்மையிற் றொடர்ந்து கிடந்தவென் சிந்தைப் - பாழறை யுனக்குப் பள்ளியறை யாக்கிச் சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி - செந்தை நீயிருக்க விட்டனன் * * * * * * *"

"* * * நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை - வேரற வகழ்ந்து போக்கித் தூர்வை செய் - தன்பென் பாத்தி கோலி முன்புற - மெய்யெனு மெருவை விரித்தாங் கையமில் - பத்தித் தனிவித் திட்டு நித்தலு - மார்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர்நின்று - தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும் - பட்டி யஞ்சினுக் கஞ்சியுட் சென்று - சாந்த வேலி கோலி வாய்ந்த பின் - ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்-கருணை யிளந்தளிர் காட்ட வருகாக் - காமக் குரோதக் களையறக் களைந்து - சேமப் படுத்துழிச் செம்மையி னோங்கி - மெய்ம்மயிர்ப்புளக முகிழ்த்திட் டம்மெனக் - கண்ணீரரும்பிக் கடிமலர் மலர்ந்து புண்ணிய-வஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சு பொதி - காள கண்டமுங் கண்ணொரு மூன்றுந் - தோளொரு நான்குஞ் சுடர்முக மைந்தும் - பவளநிறம் பெற்றுத் தவள நீறுபூசி - யறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க் - காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ் - சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி - பையப் பையப் பழுத்துக் கைவர - வெம்மனோர்க ளினிதி னருந்திச் - செம்மாந் திருப்பச் சிலரிதின் வாராது - மனமெனும் புனத்தை வறும் பாழாக்கிக் - காமக் காடு மூடித் தீமை செய் - ஐம்புல வேட ராறலைத் தொழுக - வின்பப் பேய்த்தே ரெட்டா தோடக் - கல்லா வுணர்வெனும் புல்வாயலமர - விச்சை வித்துகுத்துழி யானெனப் பெயரிய - நச்சு மாமர னனி மிகு முளைத்துப் - பொய்யென் கவடு



கள் போக்கிச் செய்யும் - பாவப் பஃறழை பரப்பிப் பூவெனக் - கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து - துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு - மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து - தமக்கும் பிறர்க்கும் முதவா - திமைப் பிற்கழியு மியற்கையோருடைத்தே"

நினைந்துருகும் அடியவர் உள்ளமே ஆண்டவனுக்குரிய சிறந்த கோயிலாகும். படமாடுங் கோயில் நடமாடுங் கோயில் என்று திருமூலர் கோயிலை இருவகைப்படுத்தி, நடமாடுங் கோயிலுக்கே சிறப்புக் கூறியுள்ளார். "முகமெலாங் கண்ணீர் மல்க முன் பணிந் தேத்துந் தொண்டர் - அகமலாற் கோயி லில்லை யையனை யாறனார்க்கே" என்றார் அப்பரும்.

தொண்டை நாட்டில் திருநின்றவூர் என்றொரு திருப்பதியுண்டு. அஃது இப்பொழுது தின்னனூர் என்று வழங்கி வருகிறது. அவ்வூரில் பூசலார் என்பவர் ஒருவரிருந்தார். அவர் ஆண்டவனுக்கு ஒரு புறக்கோயில் கட்ட முயன்றார். அம்முயற்சி பயன் படாமையான், அவர் ஆண்டவனை நினைந்து மனக்கோயில் கட்டலானார். அந்நாளில் காடவர் கோமானால் காஞ்சியில் ஒரு கோயில் கட்டப்பட்டது. அக்கோயிலில் ஆண்டவன் திருவுருவை நாட்ட நாள் குறிக்கப்பட்டது. முன்னாளிரவு ஆண்டவன் அரசன் கனவிற்றோன்றி "நாளை நாம் திருநின்றவூரிலுள்ள பூசலார் கோயிலில் புகப் போகிறோம். உனது செயலைப் பின்னே வைத்துக் கொள்" என்றாரென்று புராணங் கூறுகிறது. இதன் நுட்பமென்னை? புறக்கோயிலைவிட அகக்கோயிலே ஆண்டவனுக்குகந்ததென்பது வெளிப்படை.

ஆதலால் நடமாடுங் கோயில்களை வழிபடுவது சிறப்பென்க. ஆண்டவனை நினைந்து, அகத்தை ஆண்டவன்கோயிலாக்கிய அடியவர்களை ஆண்டவனாக வழிபடுதல் ஒரு மரபாகக் கொள்ளப்பட்டிருத்தலுமீண்டுக் கருதற்பாற்று.

ஆண்டவனை இடையறாது நினைந்து நினைந்து உருகி உருகி, இன்பநீர் பெருக்கிப், பாவத்தைக் கழுவி, மனதை ஆண்டவன் கோயிலாக்கி, அழியா விழுச் செல்வத்தைப் பெற முயல வேண்டுவது நம் பெருங் கடமை. அச் செல்வ வாழ்வுபெற முயல்வோமாக.

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்தன்பே நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு - நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே யென்னுரிமை நாயகனே யென்று - வனைந்து வனைந் தேத்துதுநாம் வம்மினுலகியலீர் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந் திடலாங் கண்டீர் - புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன் பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே"

—இராமலிங்க சுவாமிகள்.

இதுகாறும் எனது புன்மொழிகளைப் பொறுமையுடன் செவிமடுத்த அன்பர்களாகிய உங்கட்கு மீண்டும் எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன்.

சைவசித்தாந்த மகா சமாஜம் வாழ்க வாழ்க என்று அறுமுகச்சிவன் திருவடியை நினைந்து வாழ்த்தி வணங்குகிறேன்.

"நெஞ்சகமே கோயில்
நினைவே சுகந்தமன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள
வாராய் பராபரமே"

—தாயுமானார்.

# தேவாரம் என்னும் சொற்பொருள்

[ராம. சோ. சொக்கலிங்க ஐயா அவர்கள்]

இஃது, இருசொற் றொடர் மொழியாய்த் தமிழ்வேதத்துக்கு உரிய பெயராய், அதன் மெய்ந்நிலையுணர்ந்த முன்னையோராகிய செந்நெறிச் செல்வர்களால் வழங்கப் பெற்று வந்த முறையே, வழி வழியாய் யாவரும் மேற்கொண்டு போற்றும் தரத்ததாய் நிலவுகின்றது.

இவ்விரு சொற்களும் தேவன்—ஆரம் எனப்பகுக்கப்படும். தேவன் என்பது, தமிழ்மொழி நிலையில், அன் விகுதி குன்றித் தே—எனநின்றது. தே-என்னும் பல பொருளொருசொல் ஈண்டுத் தெய்வம் என்னும் பொருளதாம். ஆரம் என்னும் பலபொருளொரு சொல், ஈண்டுக் கண்டத்திலணியும் அணிவிசேடம் என்னும் பொருளதாம். தெய்வம் என்றது மகா தேவனாகிய பரமசிவன் ஒருவனையே விளக்கும். இதனை,

"தெய்வம் பலவல வொன்றேயத் தெய்வஞ் செழுங்கமலை, யுய்வம் பலவல மாதேவனேனை யுயிர்மனவே, எய்வம் பலவலமூந்துங்கயவரிசைப்பதெல்லாம், பொய்வம் பலவலங் கையாற் கரும்பதம் போற்றுகவே"

என்னுஞ் சைவசித்தாந்த நூற்றுணிபாற் காண்க.

இனித் தேவ: என்னும் சொல், வடமொழி நிலையில், திவ் என்பது பகுதியாய், விகுதியாதி பெற்றுமுடிந்த யோக பதமாம். திவ் என்னும் பகுதி ஒளி என்னும் பொருளதாம். இவ்வொளி, எக்காலத்தும் தடைப்படாது எவ்விதசகாயமுமின்றி எங்கும் விரிந்து தானே பிரகாசிப்பதாதலால் சுயம் பிரகாச மென்பதாம். இச்சுயம் பிரகாசச் சொருபனே தேவன். இவன்மகாதேவனாய சிவனொருவனே. மற்றெவரும் சீவர்களே. சோமன் சூரியன் அக்கினி அரிப் பிரமாதியர் யாவரும் சிவனருளாற் பிரகாசிக்கின்றவர்களே. அப்பிரகாசமும் ஏகதேசப் பிரகாசமே. அதுவும் மோகாதிகளால் மறைந்தொடுங்கு நிலையதாதலால் அவர்கள் சுயம்பிரகாசரல்லர். இதனை, உமையம்மையார் ஒரு சமயம் சிவபிரானுடைய கண்களை மூடின போது, சோம சூரியாக்கினி அரிபிரமாதிய ரெல்லாரும் சீவந்தர்களாயிருந்தும், ஒளியின்றி எவ்வுலகும் இருள் மூடியது நோக்கியுந் தெளியலாம். அவர்கள் சுயம் பிரகாசரல்லராயினும், தவநிலையராய்ச் சிவவழிபாடுசெய்து அவனருளால் ஒளிர்தலால் உபசார முறையில் தேவரென்று கூறப்படுகின்றனர். அவர்களது ஏகதேச ஒளி போலாது, தடையின்றி எங்கும் நிறைந்து என்றும் ஒரேபடித்தாய்ப் பிரகாசிக்கின்ற சர்வ வியாபக ஒளியினனாதலால், பரமசிவனொருவனே வேத சிவாகமாதி உண்மை நூல்களால் மகாதேவனென்று விளக்கப்படுகின்றான்.

இதனை, அதர்வசிரோப நிஷதம்:— "அதகஸ்மாதுச் யதே மஹா தேவ: யஸ் ஸர்வாந் பாவாந் பரித் யஜ்ய ஆத்மஜ்ஞான யோகைச் வர்யே மஹதிமஹீயதே தஸ்மாதுச் யதே மஹாதேவ." இதன் பொருள்:— பின்பு எதனால் மஹா தேவன் எனப்படுகிறான்; மற்றெல்லா இயல்புகளையும் நீக்கி மகத்தாகிய பரமாத்மஞானப் பிரகாசயோக ஐச்வரியாதிகளின் பொருட்டு (மற்றைய உபசாரதேவர் முதலியவரால்) பூசிக்கப்படுகின்றனன். அதனால்,மஹாதேவனெனப் படுகின்றான் என்றும், சுவேதாசுவத ரோபநிஷதம்:—"தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம், தம் தேவதாநாம் பரமஞ்சதைவதம், பதிம் பதீநாம் பரமம் பரஸ்தாத், விதாம தேவம் புவநேச மீட்யம்" இதன் பொருள்:—ஈசுரர்களின் மேலான பரமேசுரரும், தேவர்களின் மேலான மஹாதேவரும், பதிகளின் மேலான பரமபதியும், புவநேசரும், துதிக்கத்தக்கவருமாகிய மஹாதேவரை அறிகின்றோம் என்றும், கிருஷ்ண யசுர்வேத கர்ப்போப நிஷதம்:—யதி யோந்ய: ப்ரமுச்யே: யம்ப்ரவர்த்யே பரமேச்வரம், பர்க்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்" இதன் பொருள்:—யோநியை (கர்ப்பத்தை) விட்டு வெளிவருவேனானால், பரமேசுரரும், பர்க்கரும், பசுபதியும், ருத்திரரும் ஜகத்குருவுமான மஹாதேவரைச் சரணமடைவேன் என்றும் விளக்கும் ஆரிய வேதாந்த மந்திரங்களாலும்,

"வாது செய்து மயங்கு மனத்தராய் ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள் யாதோர் தேவரெனப்படு வார்க்கெலாம், மாதேவ னல்லால் தேவர்மற் றில்லையே" என்று விளக்கும் சீரிய திராவிட வேதமாகிய வாகீசச் சுருதியாலும் நன்கு தெளியலாம்.

இதுகாறுங் கூறியவாற்றால், மகாதேவன் சிவனொருவனே என்பதாயிற்று. இதனால், தேவாரம் என்னும் தொடர் மொழிகளில் நிலைமொழிப் பொருள் மஹாதேவனாகிய பரமசிவனே என்பது சுருதிப் பிரமாண முறையிற்றெளிவாயது.





இனி, நிலைமொழி வருமொழியாகிய இருமொழியுந் தொடர்ந்து நிற்கு நிலையில், ஆறு வேற்றுமை வகையினும் பொருள் படுதல் காட்டுவாம்.

தே—ஆரம், தேவனை விளக்கும் ஆரம் எனவும், தேவனால் விளக்கப் பட்ட ஆரம் எனவும், தேவனுக்குத் தகுந்த ஆரம் எனவும், தேவனின் வந்த ஆரம் எனவும், தேவனது ஆரம் எனவும், தேவனிடஞ் சேர்ப்பிக்கும் ஆரம் எனவும், உருபும் பயனும் உடன்றொக்க தொகையாயும், உருபுமாத்திரம் தொக்கத் தொகையாயும்,௨—௩—௪—௫—௬—௭ ஆகிய ஆறு வேற்றுமைப் பொருள்களும் விளக்க மாதல் காண்க.

ஈண்டுத் தேவனை விளக்கும் ஆரம் என்றது, வேதம் கூறும் மகாதேவனாகிய பதியின் மகிமை யியல்களைக் கலக்க மின்றித் தெளித்து விளக்குதலெனச் செயப்படு பொருளும், தேவனால் விளங்கிய ஆரம் என்றது, ராஜ ராஜ அபயகுல சேகர மஹாராஜனால் எங்குந்தேடி அறியப்படாதிருந்த நிலை நின்றும்,பொல்லா விநாயக மஹாதேவனால்,சிற்சபைப் புறத்து அறைகளிலிருக்கின்றதென்று தெரிவித்தவாறே விளங்கப் பெற்றதெனக் கருத்தாப் பொருளும், தேவனுக்குத் தகுந்த ஆரம் என்றது, மஹாதேவனுக்கு மற்றெவ்வகை ஆரங்களினும் சிறந்த தகுதியுடைய ஆரமெனத்தகுதிப் பொருளும், தேவனின் வந்த ஆரம் என்றது, சிவசொரூபிகளாகிய சமயாசிரியர்கள் திருவாக்கினின்று வந்தது அம்மஹாதேவனின்றுவந்ததேயாதலால் நக்கம்பொருளும், தேவனது ஆரம் என்றது,தேவனது உரிமையான ஆரம் எனக் கிழமைப் பொருளும், தேவனிடஞ் சேர்ப்பிக்கும் ஆரம் என்றது, "சொல்லிய

பாட்டின் பொருளுணர்ந்து சொல்லு வார்" என்றருளிய ஸ்ரீ மணிவாசகச் சுருதியின்படி, பொருளினுண்மைசெவ்வே தெளிந்து மெய்யன்புடன் உருகி நின்று தன்னைச் சிரவணமனனநிதிசெய் வாரைச் சிவபத நீழலிற் சேர்ப்பிக்கும் ஆரமென இடப் பொருளும் விளக்குதல் காண்க.

இனி, தே—ஆர்—அம் எனப் பகுத்துத் தேவனானவன் நிறைந்து விளங்கும் அழகையுடைய நூலெனக் குணவாகு பெயராய் எழுவாய்த் தொடரும், தேவச் செயல்களாகிய பற்பல அற்புதங்கள் விளைத்தலால், தேவனேயாகிய ஆரமெனப் பண்புத் தொகையும், தேவனது வாரத்தை (அன்பை) விளக்கு நூலென ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையும், தேவனை ஒத்த ஆரம் என உவமைத் தொகையும், தேவும் ஆரமும் என உம்மைத் தொகையு முதலிய அல்வழிப்புணர்ச்சி வகையினும் பொருள் கொள்ள இடந் தந்து நிற்பதாம்.

தேவாரம் என்னுஞ் சொற் பொருளினுண்மை யுணர்ந்த அறிவாற்றல் படைத்த பெரியார், மேலும் பற்பல அற்புத நயங்கள் விரித்துரைத்து விளக்குவார்கள். அடியேன் அறியாச் சிறியேனாதலால், அப்பெரியார் திருவடிகளை வணங்கித் திருவருள் என் சிற்றறிவுக் கேற்ப விளக்கிய மட்டிலுரைத்தேன்; குற்றம் பொறுத்தருளும்படி மேலும் பணிகின்றேன்.

"சிவநேசன்"

# சிவஞானபோத விளக்கம்

[உதவி பத்திராசிரியர் கி. குப்புச்சாமி முதலியார்]

## நான்காம் சூத்திரம்

### இலக்கண வியல்

ஒரு பொருளின் உண்மையை உலகத்தார்க்கு எடுத்துக்காட்ட வேண்டுமாயின், பிரமாணம், இலக்கணம் என்னும் இரண்டாலும் எடுத்துக் காட்ட வேண்டுமாதலால், மேல் இயலுள் பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களின் உண்மைகளை பிரமாணத்தால் எடுத்துக் காட்டினார், இவ்வியலுள் முப்பொருள்களின் உண்மைகளை இலக்கணத்தால் எடுத்துக் காட்டுகின்றார் ஆதலின் இது இலக்கண வியலாயிற்று. அவ்விதங் கூறுவதை யெதிர் நிறையாகப் பசு பாச பதி என்று கூறுகின்றாராதலால் முதலில் பசுவாகிய ஆன்மாவின் இலக்கணத்தைக் கூறுகின்றனர். இவ்விதம் ஆன்மாவின் இலக்கணங் கூறுகின்ற ஆசிரியர் மேற் சூத்திரத்துள் எழு ஆன்மவாதிகளை மறுத்து ஆன்மா உண்டென்று நிலைநாட்டியவர், நான்காவது சூத்திரத்தினுள் அந்தக்கரண ஆன்மவாதியை மறுப்பார் போன்றும் இலக்கணங் கூறுவார் போன்றும் கூறுகின்றனர். அதாவது,

"அந்தக் கரண மவற்றி னொன் றன்றவை
சந்தித்த தான் மாச் சகச மலத் துணரா
தமைச் சரசேய்ப்ப நின்றஞ் சவத்தைத்தே"

என்பதாம்.

(இ - ள்.) ஆன்மா - ஆன்மாவானது, அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று அந்தக் கரணங்களாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கனுள் ஒன்றல்லவாயினும், அவை சந்தித்தது, அவ்வந்தக் கரணங்களோடு கூடி நின்றது, சகசமலத்து - ஆணவ மலத்தினால், உணராது, உணர்தலில்லாது அமைச்சு அரசேய்ப்ப - நுண்ணுணர்வு இல்லாமையால் அரசனொருவன் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடு கூடி நின்று தன் தொழிலை நடத்துவதுபோல, நின்று - நிலைபெற்று, ஐந்து அவத்தைத்தே - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் தனக்குச் சூழ்ச்சித் துணையாகிய அந்தக் கரணங்களோடு கூடி நின்று ஐந்து அவத்தைகளை யுடையதாம். (என்றவாறு.)

இவ்விதங் கூறியதால் ஆன்மாவுக்கு இலக்கணம் அந்தக் கரணங்களோடு கூடி நின்று ஐந்து அவத்தைப் படுதல் என்பதாயிற்று.

முன் சூத்திரத்துள் கடைசியாகச் சமூக ஆன்மவாதியை மறுத்த காலத்து, அருகிருந்த அந்தக்கரண ஆன்மவாதி ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு பெயர் பெற்று நிற்றலால் உயிரென்பவை உயிரல்ல வென்பவை ஆகியவற்றை ஒத்துக்கொள்வோ மாயினும் மனமென்பதோ உயிரென்னும் பெயரால் வழங்கப்படுவதால் அவ்வொன்றும் தனித்தனியாக ஆன்மாவென்று கூறுதல் மிகுதியும் பொருத்தமாகும் என்று கூறுதலும், அவனுக்குப் பதில் கூறுவார் போன்று, வாதியே! இவ்வந்தக் கரணங்கள் தமக்குக் கீழ்ப்பட்டனவாகிய புறக்கரணங்கள் முதலியவைகளை நோக்கி, சத்துப்பொருள்களாகக் காணப்படுமாயினும் தம்மை நோக்கி அசித்தாய் நிற்பது என்பதனையறிவாய். ஆயின் ஆன்மாவோ, அவ்விதமல்லாது தன்னை நோக்கியுஞ் சித்தாய் உள்ளது ஆதலால் அந்தக் கரணங்கள் வேறு; ஆன்மா வேறு. அது எவ்விதமோ எனின் உயிர் ஒன்று கூடி ஐம்பொறிகளாய புறக் கரணங்கள் அறிந்த விடயங்களை இது ஏதுவாக இருத்தல் வேண்டும் என்று சித்தமானது சிந்தித்து அறியுமே யன்றி யான் சிந்தித்தேன் என்று அறியமாட்டாது. மனம் அதனை இது ஆமோ இது அல்லவோ என்று பகுத்தறியுமே யன்றி நான் பகுத்தறிந்தேன் என்று அறியமாட்டது. அகங்காரம் யான் இதனை இன்னதென்று துணிந்தறிவேன் என்று எழுந்து அறியும். ஆனால் அது யான் அறிந்தேன் என்று அறியமாட்டாது. அவ்விதம் அறிந்த அறிவை புத்தி நிச்சயித்து அறியும். ஆனால் நான் நிச்சயித்தேன் என்று அறிய மாட்டாது. ஆயின் ஆன்மாவோ இவ்வாறு சிந்தித்தல், பற்றுதல், எழுந் திருத்தல், நிச்சயித்தல் என்னும் இந்நான்கினையும் உணர்ந்து இது சுகமுடையது, இது துக்கமுடையது, இது மோகமுடையது என்று அறிந்து அவற்றால் உண்டாகும் பயன்களாகிய சுக துக்க மோகங்களை யறிந்தும் இவ்விதம் பிறவற்றை நோக்குகின்ற காலத்து அசித்தாயும், தன்னை நோக்குகின்ற காலத்து சித்தாயும் உள்ளதாதலால் தம்மை நோக்கில் சித்தாகாத அந்தக் கரணங்களில் ஆன்மா ஒன்றாகாது என்று கூறுவார்,

"மனமாதி யாலுணர்தன் மன்னு புலன்கண்
மனமாதி மன்புலனி னல்லன் மனமே
லுதித் தொன்றை யுள்ள முணர் தலதனி
லுதிக்குங் கடற்றிரையை யொத்து"

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, மனம் முதலிய அந்தக் கரணங்களால் உணரப்படுவனவெல்லாம் ஐம்பொறிகளால் தரப்பட்டு புறத்தே நிலை பெற்றுள்ள விடயங்

களால் ஆன்மா உணர்வது மனத்திற்கு மேலுள்ள புத்தியில் தோன்றியதில் ஒன்றனையேயாகும். அவ்விதம் இரண்டு விதமாக உணரும் உணர்ச்சி கடலிடத்தே தோன்றிக் கரையில் போய்ச்சேரும் அலையைப்போல பரம்பரையாக ஆன்மாவினிடத்தே வந்து தோன்றும். அதனால் மனம் முதலியன அவ்விடயங்களில் வேறா யிருப்பனபோல் ஆன்மாவும், அம்மனம் முதலிய அந்தக் கரணங்களின் வேறாகும் என்பதாம். இதன் கருத்தாவது, அந்தக் கரணங்கள் தமக்குக் கீழுள்ளவற்றை நோக்கச் சித்தாகவும், மேலுள்ளவற்றை நோக்க அசித்தாகவும் உள்ளன. ஆனால் உயிரோ அவ்வாறல்லாமல் எவ்விடத்தும் சித்தாக விருப்பது ஆகும். மேலும் இவ்வந்தக் கரணங்களின் இயல்புகளைப் பொது வகையால் சொல்லியவர் சிறப்பு வகையாலும் சொல்லுவார் மானதக் காட்சியினிடத்தும் கடலின் அலைபோல பரம்பரையில் வெவ்வேறாய் உணர்வு நிகழும் விதத்தை யுணர்த்தி உயிர் வேறாதலை உணர்த்துவாராகி,

"சிந்தித்தாய்ச் சித்தந் தெளியாதா யாங்காரம்
புந்தியா யாய்ந்து மனமாகிப்—பந்தித்து
வெவ்வேறு தானே துணிந்துள்ள வெவ்வேறா
மவ்வேறும் போது போலாங்கு"

என்றருளினர். இதன் பொருளாவது, புருட தத்துவமென்று கூறுகின்ற உயிர் வாயில் காட்சியினிடத்து கண்ட விடயங்களில் ஒன்றனை மனமாதியால் உணரும் மானதக் காட்சியினிடத்தும் ஒருவிதமாக வில்லாது சித்தமாய் நின்று இது யாது ஆகும் என்று செய்வித்தும், அதன்பிறகு மனமாய் நின்று இது யாது ஆகுமெனப் பற்றியும், அதன்பிறகு அகங்காரமாய் நின்று இது ஆமோ அல்லையோ, இது இன்னதென்பதை யான் தெளிவேன் என்று தெளிவு பிறவாது எழுந்தும், அதன் பிறகு புத்தியாய் நின்று இது இன்ன பொருளாகுமென்று தெளிந்தும், இவ்விதம் வெவ்வேறாகவே உணர்தலால் அவ்விதம் உணர்கின்ற புருடன் இவ்வந்தக் கரணங்களின் வேறாவான். அது எதுபோலெனின், சூரியன் முதலியவற்றோடு கூடி நின்று நாழிகை, நாள், பட்சம், மாதம், வருடம் முதலியனவாகிய பாகுபாடு செய்கின்ற கால தத்துவமானது, அச்சூரியன் முதலியவற்றின் வேறாயினாற் போலாகும் என்பதாம். இவ்விதம் மானதக் காட்சி கூறினவர் அதனை யுடனின்று செலுத்தும் அக்கரங்கள் இவை யென்றும், அவற்றினால் உணர்வு மாறி மாறித் தோன்றும் விதமும் உணர்த்துவார்,

"அகார வுகார மகங்காரம் புத்தி
மகார மனஞ்சித்தம் விந்துப்—பகாதிவற்றை
நாதமுள வடிவா நாடிற் பிரணவமாம்
போதங் கடற்றிரையே போன்று"

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, அகாரம் அகங்காரத்தினையும், உகாரம் புத்தியினையும், மகாரம் மனத்தினையும் விந்து சித்தத்தினையும் செலுத்து மென்றும், புருடனைப் பிரணவஞ் செலுத்துமென்றுங் கூறுவதாம். ஆயின் இவ்விதம் அக்கரங்கள் கரணங்களைச் செலுத்துவதாயும், சடமாகிய அக்கரங்கள் எவ்வாறு செலுத்தும் என்னும் ஐயத்தை நீக்குவார் அவ்வக்கரங்களை யதிட்டித்து நிற்கும் அதிதெய்வங்கள் உண்டு. அவை யிவை யென்று உணர்த்துவார்,

"எண்ணில வோங்காரத் தீசர்சதா சிவமா
நண்ணிய விந்துவொடு நாதத்துக்—கண்ணிற்
பகரயன் மாலோடு பரமனதி தெய்வ
மகாரவுகரம் மகாரத் தாம்"

என்னும் வெண்பாவை யருளினர்.



ஆயின் இவ்விதம் ஆன்மா அந்தக் கரணங்களி லொன்றல்லவாயும், அவ்வந்தக் கரணங்களோடு சந்தித்து நிற்றற்குக் காரணம் யாது? என்று வாதி கேட்டலும், உயிரானது முதல்வனைப் போல அந்தக் கரண முதலியவற்றின் வேறாயினும், சேதனப் பொருள் ஒன்றாயினும் செம்பில் களிம்புபோல மூல மலமாகிய ஆணவ மலத்தோடு உடனிருத்தலால் தன் இயற்கையால் அறிவதற்கு இல்லாது கருவிகளாகிய அந்தக் கரணங்களோடு கூடி நின்று உணர்வதாயிற்று என்றனர். அது கேட்ட வாதியானவன் இவ்விதம் ஆன்மாவானது சகச மலமென்னும் ஆணவ மலத்தினால் அறிதற்கில்லாது ஒழியுமாயின் பின்னர் கருவிகளோடு கூடிய மாத்திரம் பின்னர் அறிவது எவ்விதம்? என்றும், ஏன் மாயா மலமே மறைத்துக் கொண் டிருக்கின்றது என்று கூறுதலாகாது என்று கூறுதலும் அதை விளக்கும் வண்ணம்,

"மாயாதநு விளக்கா மற்றுள்ளங் காணாதே
லாயாதா மொன்றை யதுவதுவாய்—வீயாத
வன்னிதனைத் தன்னுண் மறைத்தொன்றுங் [காட்டம்போற்
றன்னைமல மன்றணை தருன்"

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, உயிரானது, ஆகந்துக மலம் அதாவது நடுவில் வருவது என்று சொல்லப் படும் மாயையின்காரியமாகிய உடம்பினைத் தனக்குக் காட்டாகக் கொண்டு காணாதாயின், ஒரு விடயத்தையும் அறிவது இல்லையாம். சகச மலமாகிய ஆணவமலமோ உயிரை அநாதியே பற்றி நிற்பது காட்டம் முதலியவற்றுள் அதுவதுவாகவே இருந்து தனக்குக் கெடுதலில்லாத வன்னியைத் தனக்குள்ளே மறைத்து வைத்து ஒன்றுபோல் நிற்கும் காட்டம்போலுமுள்ளது. ஆதலால் உயிர்க்கு அறிவை விளக்குகின்ற தன்மை மாயையின் செயலாகும். அவ்வறிவினைத் தடை செய்துகொண்டு நிற்பது ஆணவமலத்தின் காரியமாகும். இவ்விரண்டு மலங்களும் முறையே ஒளியும் இருளும் போல் பகைத்து நிற்பனவாதலால், ஒளிமயமாகிய மாயை உயிரை மறைத்தற்கில்லை. இருள் மயமாகிய ஆணவ மலமே உயிரின் அறிவை மறைப்பதாகும். அவ்வாணவ மலத்தின் சக்தி குறைந்த காலத்தே ஆன்மாவுக்கு அறிவுண்டாம் என்றதாயிற்று. ஆயின் இவ்விதம் ஆணவமலசக்தி குறைந்த காலத்து அறிகின்ற உயிர் அந்தக் கரணங்களோடு ஏன் கூடி யறிதல்வேண்டும்? அவ்விதங் கூடுமாயினும் இருளிடத்தே யகப்பட்ட கண்ணானது விளக்கோடு கூடிய விடத்து, அங்குள்ள விடயங்களைப் பார்த்தலே யல்லாமல் ஒவ்வொருவிதமாக அவத்தைப் படுதற்கு இல்லை. அதுபோல மலத்தில்அகப்பட்ட உயிர் அந்தக் கரணங்களாய கருவிகளோடு சந்தித்தவிடத்து ஒரு தன்மையா யிருத்தலே யமையும். சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்கின்ற ஐந்து அவத்தைகளும் படுவானேன்? என்னலும் அரசனொருவன் நுண்ணுணர்வுடைய அமைச்சர்களோடு இருந்து தன் அரசை நடத்துவது போல் உயிரும் அந்தக்கரணங்களோடு கூடி நின்று ஐந்து அவத்தையும் படுவதாயிற்று. அது எவ்விதமோவெனின், அரசனொருவன் தான் மாளிகையை விட்டு வெளிச் செல்லுங் காலத்து எல்லா வீரர்களோடுஞ் சென்றும் பின்னர் மாளிகைக்குத் திரும்புங் காலத்து அந்தந்த வீரர்கள் இருக்க வேண்டிய இடத்துவிட்டுத் தான் தனியாக அந்தப்புரத்துக்குச் செல்வதுபோல், இவ்வான்மா சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து இடங்களிலே நிற்கும் என்பதாயிற்று என்றனர்.

ஆயின் இவ்விதம் ஆன்மா ஐந்து அவத்தைப் படுமாயின் அவ்வவத்தை வேறுபாடு எவ்விதமிருக்கும் என்னலும்,

"ஒன்றனையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்தமித யத்து—மன்றவே

யையைந்தா னன்னுதலிற் கண்டத்து வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு ''

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது சாக்கிரமென்கின்ற நனவினிடத்தே அதற்குத்தானமாகிய இலாடத்தில் முப்பத்தைந்து தத்துவங்களோடு தொழிற்படுமென்றும், சொப்பனமென்கின்ற கனவில் அதன் தானமாகிய கண்டத்தில் புறஇந்திரியங்கள் பத்தும் நீங்கலாக இருபத்தைந்து தத்துவங்களோடு தொழிற்படுமென்றும் சுழுத்தி யென்கின்ற தூக்கத்தில் அதன் இடமாகிய இதயத்தில் மூன்று தத்துவங்களோடு தொழிற்படுமென்றும், பிறகு துரியமென்கின்றதன்மையில் அதன் இடமாகிய உந்தியில் இரண்டு தத்துவங்களோடு தொழிற்படுமென்றும், துரியாதீதம் என்னுந் தன்மையில் அதன் இடமாகிய மூலாதாரத்தில் புருடன் ஒருவனே நிலைபெற்று வாழ்வானென்றும் கூறியதாகும். இவ்விதம் துரியாதீதத்தை யடைந்த புருடன் மீளவும் சாக்கிரத்தை யடையும் விதம் எவ்விதம் என்று அறிவித்தற்குக் கீழ் வரும் உதாரணத்தாலுங் கூறினர். அதாவது,

'' இலாடத் தேசாக் கிரத்தை யெய்தியவுள்ள
மிலாடத்தே யைந்தவத்தை யெய்து-மிலாடத்
[தே
யவ்வவ விந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
யவ்வவற்றி னீங்கலது வாங்கு.

என்பதாம். இவ்விதம் ஆன்மாவானவன் ஐந்தவத்தைப்படுந் தன்மையை, '' அமைச்சர சேய்ப்ப நின்று ஐந்தவத்தே '' என்றதால் முடித்துக் காட்டினர்.

குறிப்பு :—ஆன்மாவின் இலக்கணம் இதுவென மெய் கண்டார் உணர்த்துகின்ற இச்சூத்திரத்திற்குத் தெளிபொருள் விளக்கம் எழுதவந்த பொய் கண்டார் 'உணராது' என்னுஞ்சொல்லிற்குத் 'தனது நிசவடிவம் சச்சிதானந்த சிவமாமென்பதை அறியாதிருத்தலால் என்றும், 'செம்பின்கண் களிம்பு நீங்கியபோது அது பொன்னாகவே விளங்குதல் போல, ஆன்மாவின்கண் அஞ்ஞானம் நீங்கியபோது அது சிவமாகவே விளங்குகின்றதென்பதாம், என்றும் தாம் மயங்கியிடர்ப்படுவதே யல்லாமல் தம் மாணாக்கரையும் மயங்க வைக்கின்றனர். இச்செயல் பாற் கடலில் சென்றறியாத உயிரொன்று வினை வயத்தால் அக்கடல் சென்று அடைந்தும், அதைக் குடிக்க அறியாது கலக்குவது போலுள்ளது என்று கூறுவதைக் காட்டிலும் வேறொன்றும் கூறுவதற்கு நாவெழவில்லை.

---

# கொல்லி மலையின் வளங்களும் யான் கண்ட புதுமைகளும்

[சே. அருணசலம் பிள்ளை]

பண்டைக் காலத்தில் நந்தமிழ்ப் புலவர்களுக்குப் பொன்னையுங் களிற்றையும் வரையாதளித்துக் கன்னித் தமிழ்மணங் கமழச் செய்த கடையெழு வள்ளல்களி லொருவராகிய வல்வில்லோரி யாண்ட கொல்லிக் கூற்றத்தின்கண், சைவ சமய குரவருள் ஒருவராகிய அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில்

தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன்
பள்ளிதேவன் குடிசிராப் பள்ளிதெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளிகோவல்
வீரட்டங் கோகரணங் கோடிகாவும்
முல்லைப் புறவம் முருகன்பூண்டி
முளையூர் பழையாறை சத்திமுற்றம்
கல்லில் திகழ்சீரார் காளத்தியும்
கைலாய நாதனையே காணலாமே.

'' கொல்லிக் குளிரறைப் பள்ளி '' எனச் சிறப்பிக்கப் பெற்றுக் கோவில்



கொண்டு, பிறைமுடிப் பெம்மான் திருவருளளிப்பதைத் தமிழ் மக்களனைவரும் நன்கறிவர். அவ்வாலயத்தில் ஆடிமீ 18உ யன்று ஆண்டுதொறும் விழா நடைபெறுகின்றது. அம்மலை அடியிலிருந்து ஆலயத்திற்குச் சுமார் ஒரு காவத தூரமிருக்கலாம். தமிழ்நாட்டு மக்கள், தஞ்சை, திருச்சி, சேலம் முதலாகிய பல விடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்காக விழாக் காண்பான் வருகின்றனர். அம்மலை மீதேறுவது துன்பமா யிருப்பினும், அம்மலையின் வளங்களின் வனப்புகள் கண்டோர் மனதைக் கவர்ந்து விடுகின்றமையால் களிப்புட னேறிவிடுகின்றனர். அம்மலை முழுவதும் பல குளிர் மரப் பொதும்பர்களை அகத்தே கொண்டு பச்சைப் பசேலென மிளிர்கின்றது. குயில்கள், கிளிகள் முதலிய இனிய குரல்களையுடைய பறவைகளும் ஒலிக்கின்றன. சிகரத்தின்மேல் சுமார் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் சமமாயுள்ள பல விடங்கள் காணக்கிடக்கின்றன. அவைகளில் குறிஞ்சி நில விளைவையே யன்றி மருத நில விளைவையுங் காணலாம். தாமரை மலர்களைத் தன்னகத்தே கொண்ட தடாகங்களும், அருவிகளும் வழியில் மிக அழகாக மிளிர்கின்றன. இன்னும் அவ்வழியில், இருநூறு அடி முதல் முன்னூறடிவரை நீண்டு வானையளாவிய கோடிக் கணக்கான மா, பலாக்களும், கதலி, கொய்யா, எலுமிச்சை, கிச்சலி முதலிய ஏனைய மரங்களும் காப்பிக் கொட்டையை விளைவிக்கின்ற செடிகளும் தண்ணீர் வளத்தால் பருவத்தாலன்றியும் பழுத்து உதிர்ந்து வழிப்போக்கர்களின் கால்களில் மிதிப்புண்டு கிடக்கின்றன. முட்களைப் புறத்தே கொண்ட பலாவின் கனிகள் தலையிடிக்குமாறு தாழ்ந்து தொங்குகின்றன. சந்தனம் அகில் முதலிய பொதும்பர்கள் மலர்ந்து பரிமளிக்கின்றன. அம்மலர்ப் பொதும்பர்களில் தேனையுண்டு வண்டுகள் மிழற்றுகின்றன. பழங்களையுண்டு பறவைகள் பாடுகின்றன. எக்காலத்தும் சில விடங்களில் மஞ்சுகள் சஞ்சரிக்கின்றன. இவைகளையெல்லாம் கண்ணுற்று, நம் ஆன்றோர்கள் 'சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய காப்பியங்களில் நில வளங்களைச் சிறப்பித்திருப்பது அணுவளவுந் தவறல்லவென் றெண்ணி இறும்பூதெய்தி, இறைவனுறையும் ஆலய மடைந்தேன்.

ஆலய மடைந்து அறைப்பள்ளி நாதரையும், அம்மனையுங் கண்டு அடங்கா மகிழ்வெய்தி அடிகளில் முடியுற வணங்கிப் பின் அறுமுகப் பெருமான் திருவுருவினையுங் கண்டு களிப்புற்றேன். உட்பிராகாரத்தில் சிவாலயத்தின்கண் உள்ள மூர்த்திகள் யாவும் முறைப்படி இருக்கக் கண்டேன். பாரந்த கற்பாறைகளையும், குளிர்ந்த நீரையும் அகத்தே கொண்டு பல குளிர் மரப் பொதும்பர்கள் புடைசூழ ஓடுகின்றதொரு யாறு. அவ்வியாற்றின் படித் துறைக்கு 'மீன் துறைப்படி' எனப்பெயரிட்டு வழங்குகிறார்கள். அதனருகில் பல அழகிய மீன்கள் மேய்கின்றன. சிலர் அவைகளைப்பற்றி, மெலிந்து வளைந்த கம்பியால் மூக்கு குத்தி விடுகின்றார்கள். அதுவும் அன்னோர்களது நோய் முதலியன நீங்குதற் பொருட்டு இறைவனை வேண்டிக்கொண்டு செய்வதாம். இவ்வழகிய ஆற்றின்கண் மகிழ்வோடு நீராடி உணவு உண்கிறார்கள். ஆலயத்தின் மற்றொரு திசையிலிருந்து கீழிறங்கினால் சுமார் ஒரு அரைக்கால் மைல் உயரத்திலிருந்து மிக அழகான நீரருவி யொன்று விழுகின்றது. அந்த நீர் வீழ்ச்சியினை மக்கள் 'ஆகாய தீர்த்தம்' என்று கூறுகின்றார்கள்.

அன்புடைய பெரியோர்களே ! சில ஆண்டுகளின் முன், இம்மலை விழாக்காணச் சென்றிருந்தேன். அக்காலத்தில் நில மக்களும் மலைமக்களும் ஆலயத்தில் பெருங் கூட்டமாய்க் கூடியிருந்தனர். கூடி யிருந்தவர்களில் மலை மக்களிடையே திருநீறு இல்லாத நெற்றியினைக் காணவே முடியவில்லை. அன்றியும் வஞ்சகமும் பொய்யும்

பெரும்பாலும் அவர்களிடத்திற் காண முடியவில்லை. ஒரு சாரார் விழாக் காலத்தில் மக்களிடையே தங்கள் போலி அன்பைக் காண்பித்துப் படத்தின் மூலமாகவும், விரிவுரையின் மூலமாகவும் இந்துக்களில் அறிவிற்குறைந்தோர் இடும் உயிர்ப் பலியையும், அவைகளை யேற்றுக்கொள்ளுங் கொலைக் குல தெய்வங்களையும் விளங்கக் காண்பித்து இது முற்றும் விரோதமானதென்றும், பாபம் என்றும் பலவாறாக அறிவித்தார்கள். அவற்றை உண்மை யென்றுணர்ந்து மக்கள் அவர்களிடத்திற் பற்றுத லடையவே, எங்கள் மதம் உண்மையான மதம், நீங்கள் வேறு நாங்கள் வேறல்ல, எல்லோரும் உடனிருந்துண்ணலாம், உங்களுக்குப் பள்ளிக்கூடம் முதலிய வசதிகளும் செய்து கொடுத்து மேன்மைக்குக் கொண்டு வருவோம் என்று பல்லாற்றானும் வாய்ப்பறை யறைவித்து மயக்கினர். கபடறியா ஏழை மக்கள் இவர்கள் போலி முழக்கினை நம்பி அவ்வழிச் சாரத் தலைப்பட்டனர்.

இவ்வாண்டில் யான் சென்றிருந்தபொழுது திருநீறணிந்த மக்களை அருமையினு மருமையாய்க் கண்டு வியப்புற்றேன். இவ்வளவு விரைவில் பல கனிகளோடு சைவக்கனியுங் கனிந்த கொல்லிக் கூற்றம்பா திரி நாடானது கண்டு பதறினேன். பலர் போலித்தனமான அன்பினைக் காண்பித்து அவர்களிடமுள்ள பொருள்களை நிறையப் பெற்றுக்கொண்டு இரண்டொரு பள்ளிக்கூடங்களை யேற்படுத்தி அவைகளில் தங்கள் மதசம்பந்தமான நூல்களையே இளைஞர்க்குப் போதிக்கின்றார்கள். புறமதத்தினர் நம்முடைய மதத்திலிருந்து ஒரு பெருங் குழுவினரைக் கொள்ளை கொண்டனரே என்று வருந்தினேன். ஆனால் இவர்களிடம் எந்தக் குற்றத்தைக் காண்பித்து மயக்கினரோ அந்தக் குற்றத்தை அணுவளவுங் குறைக்க முற்படவில்லை. இன்னும் ஆயிரக்கணக்கான உயிர்களை வதைத்து உண்டுதான் வருகின்றார்கள். ஆயினும் அவர்களிடமிருந்த அன்பு இன்னும் மாறவில்லை. மலைச்சிகரத்திடையில் ஓர் ஊரில் தங்கினேன். அன்றிரவு ஓர் அன்பர் எனக்கு வேண்டிய உதவி செய்தார். அவர் கரத்தில் ஓர் அருமந்த ஆண் மகவைக்கண்டு அவர் நெற்றியில் நீறிருந்தமையால், 'ஐயா, உமது குழந்தைக்கு சோமசுந்தரம் எனப் பெயரிடும்' என்று கூறினேன். உடனே அவர் "ஐயா எங்கள் வாத்தியார் 'ஜேம்ஸ்' என்று பெயர் வைத்திருக்கின்றார். அவரறியாமல் வேறு பெயரிட மாட்டோம்" என்று கூறினார். வஞ்சகர் வலையிலகப்பட்டு இடர்ப்படும் ஏழைமக்களின் அறியாமையை என்னென்பது?

சைவர்களென்று பெயரளவில் நின்று சோம்பேறிகளாகத் திரியும் சகோதரர்களே! சைவ மடாதிபதிகளே! சைவ நன்னெறிகளை நன்குணர்ந்த பெரியோர்களே! நம்மிடத்திலுள்ள பொருட் செல்வங் கல்விச் செல்வங்களை நம்மதத்தினர்க்கு மட்டுமாகிலும் பகிர்ந்து கொடுத்துப் புறமதம் புகாமல் நன்னெறி காட்டித் தடுக்காது வாளாவிருத்தல் முறைமையோ? கூட்டங் கூட்டமாகக் கொள்ளை கொள்ளவிடுத்து உறங்குவோமாயின் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தவர்களாவோமா?

இதனைக் கண்ணுறும் அன்பர்கள் இனியேனும் முற்படுவார்களாயின், அக்குழுவினரைச் சீர்திருத்தி விடலாம். இன்றேல் இன்னும் சில ஆண்டுகளுக்குள் அறைப்பள்ளி நாதர் ஆலயமும் அறைக்குள்ளாகி விடுமென்பதே துணிபு. ஆதலால், ஒவ்வொரு சைவ அன்பர்களும் இவற்றை நன்குணருமாறு வணக்கத்துடன் வேண்டுகின்றேன்.

87147

# மதிப்புரைகள்

**சுந்தரர் புகழ்மாலை:**--இம்மாலை அப்பர் புகழை மாலையாக்கிய திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயுடு அவர்களால் யாக்கப்பெற்றது. திருமுறைகள், தலபுராணங்கள் முதலியவற்றிலுள்ள நம்பியாரூரர் தோத்திரப் பாக்களையெல்லாம் கோவைசெய்து திரு. நாயுடு அவர்கள் இந்நூலின்கண் வெளியிட்டுள்ளார். சம்பந்தர் புகழ்மாலையும், வாதவூரர் புகழ்மாலையும் இவ்வாசிரியரைக் கொண்டே வெளி வருவதற்கு நால்வர் நற்றாள் துணை நிற்க. விலை அணா நான்கு. திருச்சிற்றம்பல இல்லம், கிழக்கு மருதூர், திருநாம நல்லூர் தபால், தென் ஆற்காடு என்ற விலாசத்துக் கெழுதுக.

**தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும்:**—ஆசிரியர் திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் எம். ஏ. எம். எல். 227 பக்கம். விலை ரூ. 1¼. இவ்வாசிரியரை யறியாத தமிழ் நாட்டவர் ஒருவரும் இரார். மேல்நாட்டு ஆராய்ச்சி முறையில் தாயுமானவ சுவாமிகள் சரித்திர நுட்பங்களையும் பாடலின்கண் மிளிரும் சைவசித்தாந்த உண்மைகளையும் இந்நூல் இனிது விளக்குகின்றது. தாயுமானவ சுவாமிகள் சமரச ஞானியேயென்று புறமதத்தவரால் புகழப்படினும், சிவ ஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திரர் இயற்றிய மெய்கண்ட விருத்தியுரையையும் இந்நூலையும் பன்முறை பயில்வோர், தாயுமானவ சுவாமிகள் சிறப்பாக சைவசித்தாந்த உண்மைகளையே தமது பாடல்களில் கூறுகிறார் என்ற முடிபுக்கே வருவர். இந்நூல் ஒவ்வொரு தமிழரும் தவறாமல் வாங்கி வாசித்தற்குரியது. வேண்டுவோர் மணிவாசகமன்றம், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி டவுன் என்ற ஆசிரியர் விலாசத்துக் கெழுதுக.

**தாயுமான சுவாமிகள் திருப்பாடல்கள் :**— இப்பாடல்கள் முழுமையும் முதற் குறிப்பகராதியுடன் பாலன்பதிப்புக் கழகத்தினருக்காக சாது அச்சுக்கூடத்தினரால் சுத்தப் பதிப்பாக வெளியிடப்பட்டு, பிரதி ஒன்று நாலணா வீதம் வழங்கப்படுவதை நோக்குந்தோறும் நமக்குப் பெருமகிழ்ச்சி விளைகின்றது. நம் சமாஜம் செய்யவேண்டிய பணியை இப்பதிப்புக் கழகத்தினர் அன்புடன் ஏற்று விரைவுடன் வெளியிட்ட நன்றி மறக்கற்பாலதன்று. தமிழ் நாட்டினர் இப்பதிப்பை மிக விரைவில் வாங்கி மேன்மேலும் பல்லாயிரம் பிரதிகள் விரைவில் வெளி வருவதற்குத் துணை புரிவார்களாக. வேண்டுவோர், சென்னை, இராயப்பேட்டை முருகவேள் புத்தகசாலைக் கெழுதுக.

**பதி பசு பாச விளக்கம்:**—ஆசிரியர் திரு. D. கோபால செட்டியார், "நியூரிபார்மர்" பத்திராதிபர், இராயப்பேட்டை, சென்னை. 476-பக்கம். விலை ரூ. 1½. இந்நூல் மேல்நாட்டுத் தத்துவப் பேரறிஞர் ஸ்வீடன் பர்க் அவர்கள் எழுதிய லத்தீன் நூலொன்றின் மொழி பெயர்ப்பு. திரு. கோபால செட்டியார் ஸ்வீடன்பர்க் நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பது யாவரும் அறிந்ததே. இந்நூல் பதி, சிவசூரியன், காரணகாரிய வேற்றுமைகள், சிருட்டி, பசு, என்னும் ஐந்து பாகங்களையுடையது. ஒவ்வொரு பாகத்திலும் பல அத்தியாயங்கள் உள்ளன. ஸ்வீடன்பர்க் என்ற ஞானியார் "Bible" என்ற விவிலிய நூலின் பல பகுதிகளுக்குச் சைவ சித்தாந்த பரமாக உரை கோடல் பெரிதும் வியக்கத்தக்கது. இவ்வியல்பு இந்நூலில் எங்கணும் பரந்து கிடக்கின்றது. சைவசித்தாந்தக் கருத்துக்களோடு மேனாட்டுத் தத்துவாசிரியர்களுள் ஸ்வீடன்பர்க்கின் கருத்துக்கள்தான் மிகவும் நெருங்கி வருகின்றன வென்பதைத் தமிழ் நாட்டினர் நன்கறிவர். இந்நூலை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் பயில விரும்புகிறோம். திரு. கோபால செட்டியார் அவர்கள் ஸ்வீடன்பர்க் நூல்களை மொழிபெயர்ப்பதில் வைத்திருக்கும் விடாமுயற்சியையும் ஊக்கத்தையும் பாராட்டுகிறோம்.

**மலர்ந்த மல்லிகை :**—ஆசிரியர் வி. சே. ஆறுமுக முதலியார், நால்வர் பவனம், பிரேஸர்டவுன், பெங்களூர். 128 பக்கம். விலை அணா 13. இந்நூல் ஒரு நவீனம் அல்லது நாவல் எனப்படும். இக்காலத்தில் எழுதப்படும் நாவல்களைப்போல் காமப் பேய்கட்குக் களிப்பூட்டும் இழிந்த முறையில் இந்நூல் எழுதப்படவே யில்லை. எங்கணும் தெய்வபக்தி, நல்லொழுக்கம், திருமுறை பாராயணம் முதலிய நல்ல பொருள்களே இந்நூலில் விளங்குகின்றன. வேசிவாய்ப்பட்ட கணவனை மனைவியே திருப்புகழ் பாராயணம் செய்து இல்லறத்துக்கு மீட்ட மாண்பு பெரிதும் வியக்கத்தக்கது. மல்லிகை என்ற பெண்மணியின் கூர்த்த மதி, மருதப்பன் நல்லொழுக்கம், வரதராஜன் விசுவாசம் முதலியன மறக்கற்பாலனவன்று. தலைவன் தலைவிக்குரிய உண்மைக்காதல் காமவெறிக் களியாடல்களின்றி இந்நூலில் ஒளி வீசுகின்றது. உண்மைச் சைவர்கள் கைகூசாமல் எடுத்து வாசிக்கத்தக்க நாவல் இதுவேயாகும். இவ்வரிய முறைபற்றி இவ்வாசிரியரும் பிறரும் நாவல்கள் எழுதி தெய்வபக்தி, நல்லொழுக்கம் முதலியவற்றைப் பரப்புவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 10.

***வஜ்ஜிரசூசி*** :—அஸ்வகோஷா என்பவரால் வடமொழியி லியற்றப்பட்ட இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட் டிருக்கிறது. இந்நூலில் முக்கியமாக ஜாதி வேற்றுமை யென்ற பிணி யொழிய வேண்டுமென்ற கருத்து வற்புறுத்தப் படுகின்றது. வேண்டுவோர் இந்நூலை இலவசமாக வழங்கும் திரு. J. M. கிருஷ்ணமாச்சாரி, தெற்கு மாசி வீதி, மதுரை என்ற விலாசத்துக்கெழுதுக.

**ஞானதீபம்** மலர் க. இதழ் க:—இது கொழும்பிலிருந்துவெளிவரும் ஒரு புதிய மாதப் பத்திரிகை. ஆசிரியர் M. H. மதார்சாஹிப் முஸ்லீம் மஹான்கள் கருத்துக்களைத் தமிழில் வெளியிட்டு, ஐம்புல விவகாரங்களை யொழித்து அகக்கண் திறந்து அப்பாலுள்ள இறைவனுடைய சன்மானமாகிய ஹிதாயத்துடைய இல்மைக் குறித்து நபிமார்கள் ஞான உபதேசங்களை வெளியிடும் நோக்கமுடையது இப்பத்திரிகை. வருட சந்தா ரூ. 2. க்ளிப் போர்ட்பிரஸ், கொழும்பு என்ற விலாசத்துக் கெழுது.

---

# நம் சமாஜத் தொண்டுகள்

## திருவையாற்றில் கூட்டம்

சென்ற ஆடி அமாவாசையன்று (25-7-1930) திருநாவுக்கரசர் திருவையாற்றில் திருக்கைலாயக் காட்சி கண்ட உத்ஸவம் நடந்தது. அன்று இரவு 10 மணிக்குத் திருவையாற்றுக் கோவிலிலுள்ள தென்கைலாயக் கோவிலில் நம் சமாஜக் கூட்டம் கூடிற்று. பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர். திருவையாறு சமஸ்கிருத காலேஜ் தமிழாசிரியர் திரு. கு. சோமசுந்தர தேசிகர் அவர்கள் தலைமைபூண்டு பெரிய புராணத்துள்ள திருநாவுக்கரசர் புராணத்தை மிக அருமையாக விளக்கிச் சொன்னார்கள். பின், நம் சமாஜத் தொண்டரில் ஒருவராகிய தஞ்சை இளைஞர் திரு. சாமிநாத னென்பார் "சைவ சமயம்" என்ற பொருள் பற்றியும், தஞ்சை செண்ட்பீட்டர்ஸ் உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் சிவகுருநாதம் பிள்ளை அவர்கள் "திருக்கோவிலில்லாத" என்ற அப்பர் திருத்தாண்டகத்திலுள்ள விரிந்த பொருளைப் பற்றியும், திருவாளர் மறை. திருநாவுக்கரசு "மனிதர்காள் இங்கேவம்" என்ற அப்பர் திருப்பாட்டினால் அவரது உள்ளக்கசிவின் அரும்பொருளைப் பற்றியும் விரிவுரை செய்தார்கள். பின்னர் உத்ஸவம் நடைபெற்றது.

## சேம்பங்குடியில் கூட்டம்

சென்ற 19-9-1980 அன்று இரவு 9 மணிக்குத் தஞ்சைத் தாலூக்காவில் செம்பங்குடி என்னுமூரில் புதிதாகக் கட்டப்பட்ட முருகன் கோயில் மண்டபத்தில் அவ்வூர் சிறுவர் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் திருவாளர் மகாதேவ ஐயர் அவர்கள் முற்சியாலும் மேற்படியூர் மிராசுதார் திருவாளர் நடேசமூப்பனார் அவர்கள் முயற்சியாலும் நம் சமாஜக் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பல்லாவரம் பொதுநிலைக்கழக மறை. திருநாவுக்கரசு அவர்கள் "சைவ சமய வரலாறு" என்ற பொருள்பற்றிப் பேசினார்கள்.

---

# இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

### திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றியது

இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருணெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை புணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அழுத அழுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இக்காலதேச வர்த்தமானம் வேண்டுஞ் செம்மைச் சீர்திருத்தங்கள்பல இந்நூற்கண் மிளிர்கின்றன. விலை ரூபா 1.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.